

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 68 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 30 – செவ்வாய்க்கிழமை 17 அக்டோபர் 2023 – கோவை ★ ★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 68: Thiruvalluvar Year - 2054 - Purattasi 30 - Tuesday 17 October 2023 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## டாக்டர் அப்துல் கலாம் நம்பி எதிர்பார்த்தபடி

# இந்தியா அறிவியல் பார்வையுடன் சிறந்து விளங்கும்!

## சிலையைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டரில் புகழாரம்!

**சென்னை, அக். 17 –**

**“இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் நம்பி எதிர்பார்த்தபடி இந்தியா அறிவியல் பார்வையுடன் சிறந்து விளங்கும்” என்று அவரது சிலையைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் புகழாரம் சூட்டினார்.**

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறு வப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து அச்சிலையின் முன்பு புகைப்படம் எடுத்துக் கொண்ட காட்சி. இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வு பற்றிய விவரம் வருமாறு:

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ் நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டி வளர்த்த கவிஞர்கள், இசைமேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும்,செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், 2021-22ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், “இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானியா கவும், இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்குப் பெரும் வழிகாட்டியாகவும் திகழ்ந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களுக்கு சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

1931ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 15ஆம் நாள், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் ஜைனுலாப்தீன் மற்றும் திருமதி. ஆஷியம்மா ஆகியோருக்கு மகனாக டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பிறந்தார்.

டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், இராமேஸ்வரத்தில் பள்ளிப் படிப்பை முடித்து, திருச்சிராப்பள்ளியிலுள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் இயற்பியல் பட்டப்படிப்பு பயின்றார். 1955 ஆம் ஆண்டு தன்னுடைய விண்வெளி பொறியியல் படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டியில் தொடங்கிய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

ஒன்றிய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் வானூர்தி அபிவிருத்தி பிரிவில் விஞ்ஞானியாக தன்னுடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கிய டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் (ISRO) தனது ஆராய்ச்சிப்பணிகளைத் தொடர்ந்து, துணைக் கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார்.

மேலும், SLV III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகிணி I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## நரம்பியல் துறை வல்லுநராக – இந்தியாவின் முகமாகவே

# உலகம் முழுவதும் அறியப்பட்ட சிறப்புக்குரியவர்!

## மருத்துவர் பி.இராமமூர்த்தி நூற்றாண்டு விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, அக்.17–**

**“இந்தியாவின் முகமாகவே உலகம் முழுவதும் அறியப்பட்ட சிறப்புக்குரியவர் மருத்துவர் பி.இராமூர்த்தி அவர்கள்” என்று அவரது நூற்றாண்டு விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலியில் உரையாற்றும் போது புகழாரம் சூட்டினார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2023) காணொலிக் காட்சி வாயிலாக நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் பி. ராமமூர்த்தி அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துரை வருமாறு:**

நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய மருத்துவர் பி. ராமமூர்த்தி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுவதையும், அதற்காக மிகச் சிறப்பான நினைவுத் தொகுப்பு வெளியிடப்படுவதும் மகிழ்ச்சிக்குரியது.

இந்த நிகழ்ச்சிக்காக அவரது குடும்பத்தின் சார்பில் என்னிடம் அழைப்பிதழ் தந்தார்கள். ராமமூர்த்தி அவர்கள் எங்கள் குடும்ப மருத்துவர் என்பதை தாண்டி எங்கள் குடும்ப நண்பர் என்று தான் முதலில் சொல்ல வேண்டும்.


மருத்துவர் ராமமூர்த்தி அவர்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் நீண்ட கால நட்பு உண்டு. தலைவர் கலைஞர் அவர்களும், மருத்துவர் ராமமூர்த்தி அவர்களும் பேசிக் கொண்டிருப்பதை கேட்டால், இளமைக் கால நண்பர்கள் பேசிக் கொள்வதைப் போல இருக்கும்.

### மிசா காலத்தில் மருத்துவமனைக்கு என்னை பார்க்க வந்தவர்!

தலைவர் கலைஞரின் இலக்கிய ஆளுமை, எழுத்துநடை, ஆட்சி நிர்வாகத் திறன் மீது டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் பெருமதிப்பு கொண்டிருந்தார். கலைஞர் மீது மட்டுமல்ல, என் மீதும் மருத்துவர் அவர்கள் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.

நெருக்கடி நிலைக் காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் நான் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது, உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தேன். என்னைப் பார்ப்பதற்காக அனுமதி பெற்று வந்தவர் தான் மருத்துவர் ராமமூர்த்தி அவர்கள். எனது உடல் நிலையைக் கவனித்துக் கொண்டவர் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள்.

மருத்துவ உலகத்தை கடந்து, அவருக்கு சமூக ஆர்வமும், நாட்டு மக்கள் மீதான அக்கறையும் அதிகமாக இருந்தது.



### இருசக்கர வாகனப் பயணத்தில் தலைக் கவசம் அணிய வலியுறுத்தியவர்!

இருசக்கர வாகனங்களில் அதிவேக பயணத்தின் காரணமாக பெரும் விபத்தையும், உயிரிழப்பையும் சந்தித்து வருவதை அறிந்து, தலைக்கவசத்தை கட்டாயமாக்க வேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வீட்டிற்கே வந்து வாதாடினார். எதையும் கட்டாயமாக்கினால் கெட்ட பெயர் வந்து விடும், உள்நோக்கம் கற்பிப்பார்கள் என்று முதலமைச்சர் கலைஞர் அதன் இன்னொரு பக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். மனித உயிரைக் காப்பதைவிட விமர்சனங்கள் பெரிதல்ல என்று வலியுறுத்தியவர் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள். அந்த இடத்தில் மருத்துவர் என்பதைக் கடந்து மனிதாபிமான காவலராக அவர் காட்சியளித்தார்.

### மிகப் புகழ்வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவர்!

மிகப் புகழ்வாய்ந்த, நாட்டுப்பற்று மிகுந்த குடும்பத்தில் பிறந்த ராமமூர்த்தி அவர்கள், தனக்கெனத் தனிப் பாதையைத் தேர்ந்தெடுத்ததோடு, அதில் தனிச்சிறப்பான இடத்தை தனக்கென உருவாக்கிக் கொண்டவர். உயிர் காக்கும் துறையான மருத்துவத்துறையில், நரம்பியல் துறை வல்லுநராக இந்தியாவின் முகமாகவே உலகம் முழுதும் அறியப்பட்ட சிறப்புக்குரியவர் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள். இந்திய நரம்பியல் அறுவை சிகிச்சை இயலின் தந்தை என்றே போற்றப்பட்டவர்.

### குடியரசுத் தலைவர் – பிரதமர்களால் மதிக்கப்பட்டவர்!

டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் உலகம் முழுதும் சென்று உரை நிகழ்த்தியுள்ளார், உலகெங்கிலும் இருந்து வல்லுநர்களை இந்தியாவுக்கு அழைத்து வந்து கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். நரம்பியல் துறையிலும், தலைப் பகுதியில் ஏற்படும் காயங்களுக்கான சிகிச்சைப் பிரிவிலும் பல முன்னெடுப்புகளை நிகழ்த்தியுள்ளார். புதிய பிரிவுகளை நிறுவியுள்ளார். புகழ்பெற்ற சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வராகவும் பொறுப்பு வகித்துள்ளார். இந்திய குடியரசுத் தலைவர்களாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன், வி.வி.கிரி ஆகியோராலும், இந்தியப் பிரதமர்களான ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியோராலும் மதிக்கப்பட்ட ஆளுமையாக இருந்துள்ளார்.

மருத்துவத்துறை முன்னோடியாகவும், மனிதநேயப் பண்பாளராகவும் திகழ்ந்த டாக்டர் ராமமூர்த்தி அவர்களின் நூற்றாண்டில் அவரது வாழ்வும் பணியும் சிறப்பான முறையில் நினைவுகூரப்பட எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரைப் போன்ற மனிதாபிமான மருத்துவ சமுதாயம் உருவாக உறுதியேற்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 17-10-2023

# ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான போர்!

இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கு இடையில் நடப்பது; ஆக்கிரமிப்பாளருக்கும் ஆக்கிரமிப்பை எதிர்ப்பவருக்கும் இடையே நடக்கும் போர்!

**புலம்பெயர்ந்து வந்திருந்த யூதர்கள் நலனுக்காக உருவாக்கித் தரப்பட்ட நாடு இஸ்ரேல். அதுவும் பாலஸ்தீனத்தில் இருந்து பிரித்து உருவாக்கித் தரப்பட்டது. எப்போதுமே சும்மா கிடைத்த மாட்டைத் தானே பல்லைப் பிடித்துப் பார்ப்பார்கள். இருக்க இடம் கொடுத்தால், படுக்க இடம் கேட்பார்கள். அப்படி, எந்த பாலஸ்தீனத்தில் இருந்து ஒரு நாட்டை உருவாக்கிக் கொடுத்தார்களோ, அந்த பாலஸ் தீனத்தையே ஆக்கிரமித்தது இஸ்ரேல். ஆக்கிரமிப்பையே தொழிலாக வைத்துக் கொண்டும் வருகிறது இஸ்ரேல். இதனை அமைதியாக அல்ல, அச்சுறுத்தும் வகையில் செய்து வருகிறது அந்த நாடு.**

பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு தனிநாடு என்ற பிரிட்டனின் திட்டத்துக்கு சர்வதேச நாடுகளின் கூட்டமைப்பும் 1922-ல் ஒப்புதல் வழங்க, ஐரோப்பிய நாடுகளில் இருந்த யூதர்களில் 90 ஆயிரம் பேர் பாலஸ்தீனத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டு அங்கே குடியமர்த்தப்படுகிறார்கள்.ற அமை இரண்டாம் உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை பாலஸ்தீனத்தை மூன்றாகப் பிரித்து அரபு நாடு, யூத நாடு, ஜெரூஸலம் தனி என 1947 நவம்பர் 29-ல் அறிவித்தது. இதன்படி பாலஸ்தீனில் 70 சதவிகிதம் உள்ள முஸ்லிம்களுக்கு 43 சதவிகித இடமும், 30 சதவிகிதம் உள்ள யூதர்களுக்கு 56 சதவிகிதம் இடமும் சொந்தம் என பிரிவினை செய்யப்பட்டது.

1948 வரை பாலஸ்தீனம் பிரிட்டன் கட்டுப்பாட்டில் இருந்தது. 1948-ஆம் ஆண்டு மே 14-ஆம் தேதி பிரிட்டன் அதிகாரபூர்வமாக பாலஸ்தீனிலிருந்து வெளியேறியது. இஸ்ரேல் என்கிற தேசம் உருவாகிவிட்டதாக யூதர்கள் அறிவித்துவிட்டார்கள். ஆம், ஒரு தனிநாடாக இஸ்ரேல் உருவாகிவிட்டது. **பாலஸ்தீனத்தில் இசுலாமியப் படுகொலைகள், அகதிகளாகத் துரத்தப்படுதல் என .. இப்படி அந்த நிலப்பரப்பே ரத்தச் சகதியாக இருப்பதற்கு இஸ்ரேல் தான் முக்கியக் காரணம்.**

வலுக்கட்டாயமாக பாலஸ்தீனர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை இஸ்ரேல் விழுங்கியது. அங்கு தங்கள் மக்களைக் கொண்டு போய் குடியேற்றினார்கள். இந்தச் சூழலில் பாலஸ்தீனத்தின் வரைபடம் என்பதே கடுகு போலத் தேய்ந்தது. இஸ்ரேலின் வரைபடம் கொழுத்தது. இன்றைய இஸ்ரேலின் பரப்பளவு 21 ஆயிரம் சதுர கிலோ மீட்டர். பாலஸ்தீனத்தின் பகுதி என்பது 6 ஆயிரம் சதுர கிலோ மீட்டர்தான்.

**இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமைப்பு ரீதியாக எதிர்க்குரல் கொடுத்தார் யாசர் அராபத். 1958 ஆம் ஆண்டு 'அல் - பத்தா' என்ற அமைப்பை அவர் உருவாக்கினார். பின்னர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராகவும் அவர் ஆனார். 1974 ஆம் ஆண்டு ஐ.நா. சபையில் புகுந்து உரையாற்றும் அளவுக்கு அவரது செல்வாக்கு உயர்ந்தது. 'ஒரு கையில் ஒலியமரக் கிளையும் இன்னொரு கையில் விடுதலைப் போராட்டத்துக்கான துப்பாக்கியும் உள்ளன. எது வேண்டும் என்பதை உலகம் தீர்மானிக்க வேண்டும்' என்றார் யாசர் அராபத். அவராலும் மிக நீண்ட காலம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இஸ்ரேலுடன் சமரசம் செய்து கொண்டார். அதன் பிறகும் அவரை நிம்மதியாக அவர்கள் இருக்கவிடவில்லை. இறுதிக்காலத்தில் மிகுந்த நெருக்கடியை இஸ்ரேல் அவருக்குக் கொடுத்தது. பின்னர் உயிர் துறந்தார் அராபத்.**

இதற்கிடையில் இஸ்ரேலுக்கு எதிராக பாலஸ்தீனத்தில் உருவானது தான் 'ஹமாஸ்' இயக்கம் ஆகும். காசாவை தங்களது ஆளுகையில் வைத்துள்ளார்கள் ஹமாஸ் இயக்கத்தினர். இது தான் இப்போது போர்க்களமாகக் காட்சி அளிக்கிறது. மிகத் தொடர்ச்சியாக பாலஸ்தீனத்தவர்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் தொடுத்து வந்தது.

**கடந்த ஆண்டு கிழக்கு ஜெருசலேமில் கூடியிருந்த பாலஸ்தீனர்களை நோக்கி இஸ்ரேல் ராணுவம் கொடூரமான தாக்குதலை நடத்தியது. இந்த ஆண்டு மட்டும் 250க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்கள் மட்டுமல்ல, பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டனர். அப்போதும் உலக நாடுகள் அமைதியாக இருந்தன. இஸ்ரேல் போர் தொடுக்கும் போதெல்லாம் அமைதியாக இருக்கும் உலகநாடுகள், ஹமாஸ் போர் தொடுத்ததும் அறிவுரை சொல்ல வந்து விடுகின்றன, ,'வலிமையானவன் சொல்வதே வேதம்' என்ற அடிப்படையில்!**

இப்போதும், ஹமாஸ் தாக்குதல் நடத்துவதற்கு முன்னதாக இஸ்ரேல், பல்வேறு சிறுசிறு தாக்குதலைத் தொடுத்து வந்துள்ளது. இதற்கு எதிர்வினையாக இவ்வளவு பெரிய தாக்குதலை ஹமாஸ் தொடுக்கும் என இஸ்ரேல் எதிர்பார்க்கவில்லை.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "இஸ்ரேல் ராணுவம் பதிலடி கொடுத்து நாட்டைப் பாதுகாக்கும். நாங்கள் யுத்தம் செய்கிறோம். அதில் நாங்களே வெல்வோம். எங்களின் எதிரி யோசித்துக்கூட பார்த்திராத விலையைக் கொடுக்கப்போகிறார்கள். எங்கள் முழு பலத்தையும் பயன்படுத்தி, காசா நகரில் ஹமாஸ் தீவிரவாதிகள் செயல்படும் அனைத்து இடங்களையும் அழிப்போம். இந்தப் போர் நீண்ட காலம் நடக்கும்" என்று ஆவேசமாகச் சொல்லி இருக்கிறார். அமெரிக்கா, கனடா, பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, நார்வே, பிரான்ஸ், ஸ்பெயின், போலந்து, உக்ரைன், பிரேசில் உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றன. இஸ்ரேலுக்கு ஆதரவாக நிற்கிறோம் என்று இந்தியப் பிரதமரும் அறிவித்திருக்கிறார்.

பாலஸ்தீன அதிபர் முகம்மது அப்பாஸ், "பாலஸ் தீனத்துக்குள் அத்துமீறிக் குடியேறுபவர்களுக்கு எதிராகவும், பாலஸ்தீனத்தை ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய ராணுவ பயங்கரவாதத்துக்கு எதிராகவும் தங்களைத் தற்காத்துக் கொள்ளும் உரிமை என்பது பாலஸ்தீனியர்களுக்கு உண்டு" என்று தெரிவித்திருக்கிறார். இரான், சிரியா, சவுதி அரேபியா, ஏமன், கத்தார், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகள் இவர்களை ஆதரித்திருக்கிறார்கள்.

**"பாலஸ்தீன மக்களின் நிலம், சுயராஜ்யம் மற்றும் அவர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமைக்கான நீண்ட கால ஆதரவை காங்கிரஸ் அளித்துள்ளது. அதன்படி எங்கள் ஆதரவு தொடரும். இரு தரப்பினரும் தங்களது போரை உடனடியாக நிறுத்த வேண்டும்" என்ற காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியக் கமிட்டி தீர்மானம் மிகமிக முக்கியமானது. ஒன்றிய பா.ஜ.க. எடுத்துள்ள முடிவு அதிர்ச்சிக்குரியதாக இருக்கிறது.**

- தொடரும்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (15.10.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, மாணவ, மாணவியருடன் கலந்துரையாடினார்.

### பெரியார் - அண்ணா - கலைஞர் வலியுறுத்திய

# சமூக நீதிக் கொள்கையில் இந்தியாவிற்கே தமிழ்நாடுதான் முன்னணி மாநிலம்!

## தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே பாராட்டு!

*சென்னை, அக். 17-*

தமிழ்நாட்டில் சாதி, மத வேறுபாடுகள் இல்லாமல் மொழி மீதுதான் பற்று உண்டு. பெரியார், அண்ணா, கலைஞர் வலியுறுத்திய சமூக நீதிக்கொள்கையில் இந்தியாவிற்கே தமிழ்நாடு தான் முன்னோடி. பெண்கள் உரிமைகளுக்காக பெரியார் முதலில் நடத்திய சுயமரியாதை மாநாடு போல இந்த மகளிர் உரிமை மாநாடு நடைபெறுகிறது என சென்னை ஒய்.எம்.சி.ஏ. திடலில் கழக மகளிர் உரிமை மாநாட்டில் பேசிய தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே பாராட்டு தெரிவித்தார்.



மகளிர் உரிமை மாநாட்டில் தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே, பேசியதாவது:-

தமிழ்நாடு நீண்ட நெடிய பாரம்பரியத்தைக் கொண்ட மாநிலம். இங்கே சாதி மத வேறுபாடுகள் இல்லாமல் மொழி மீதுதான் பற்று இருக்கிறது. பெரியார், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள் வலியுறுத்திய சமூக நீதி கொள்கையிலும் இந்தியாவிற்கே தமிழ்நாடு தான் முன்னோடி மாநிலமாக இருக்கிறது.

பெண்கள் உரிமைகளை வலியுறுத்தி பெரியார் முதலில் சுயமரியாதை மாநாட்டை நடத்தினார். இப்போது அதே வழியில் இந்த மகளிர் உரிமை மாநாடு நடைபெறுகிறது. தமிழ்நாட்டிற்கும் எனது மாநிலமான மகாராஷ்டிராவுக்கும் பாரம்பரியத் தொடர்பு இருக்கவே செய்கிறது. மகாராஷ்டிராவில் சத்ரபதி சிவாஜி விழா, அம்பேத்கர் ஆகியோரின் நூற்றாண்டை நாங்கள் மகாராஷ்டிராவில் கொண்டாடும் நிலையில், தமிழ்நாடு இங்கே கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடுகிறது.

தமிழ்நாடு மற்றும் தமிழர்களின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் திமுக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. மக்கள் உரிமை சார்ந்த பிரச்சினைகளைத் தொடர்ந்து எழுப்பி வருகிறார்கள். கூட்டாட்சிக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கும் தமிழ்நாட்டைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். மக்களவையில் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் எப்போதும் என்னைச் சுற்றி தி.மு.க. எம்.பி.க்களே இருப்பார்கள். கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தமிழ்நாடு கடுமையாக எதிர்த்து வருகிறது.

நாடாளுமன்றத்தில் கனிமொழியைக் கண்டாலே பா.ஜ.க.வினருக்குப் பயம் வந்துவிடும். இதன் காரணமாகவே அவர் பேச எழுந்தால் உடனடியாக பா.ஜ.க.வினர் அமளியில் ஈடுபடுவார்கள். பெண்கள் என்றாலே அன்பு. கருணை என்று எங்களைப் போற்ற வேண்டாம் என்றும் ஆண்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை என்று கனிமொழி எப்போதும் கூறுவார்.

தமிழ்நாட்டில் பெண்கள் நலனுக்காக தமிழ்நாடு முதல்வரும், எனது அண்ணனுமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். அவரது திட்டங்கள் பெண்கள் வாழ்க்கையை முன்னேற்றியுள்ளது.

மகாராஷ்டிராவில் எங்கள் கட்சியில் சிக்கல் இருப்பது உங்களுக்குத் தெரியும். எங்கள் தேசியவாத காங்கிரஸ் சின்னத்தைத் தேர்தல் ஆணையத்திடம் இருந்து பெறுவதில் பிரச்சினை இருக்கிறது. இதனால் அடுத்து வரும் லோக்சபா தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட எனக்கு அண்ணன் ஸ்டாலின் வாய்ப்பு தர வேண்டும்"

இவ்வாறு சுப்ரியா சுலே அவர்கள் பேசினார்.

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றுகிறார்!

# திண்டிவனம் தொகுதி பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்!

## தொகுதி பொறுப்பாளர் சிவ.ஜெயராஜ் தலைமை தாங்குகிறார்!

*திண்டிவனம், அக். 17 -*

விழுப்புரம் வடக்கு மாவட்டம் விழுப்புரம் நாடாளுமன்றத் தொகுதி 72 திண்டிவனம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் BLA 2ஆலோசனைக் கூட்டம் இன்று (17.10.2023 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு திண்டிவனம் மயிலம் சாலையில் உள்ள ஜே.வி.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு தொகுதி பொறுப்பாளர் சிவ.ஜெயராஜ் தலைமை தாங்குகிறார். மாவட்டப் பொருளாளர் ரமணன் முன்னிலை வகிக்கிறார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இதில் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ்ச் செல்வன், செஞ்சி சிவா, டாக்டர் சேகர், அமுதா ரவிக்குமார், அருணகிரி, விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனி சின்னசாமி, கதிரேசன், பாலகிருஷ்ணன், வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை, செல்வராஜ் மணிவண்ணன், நிர்மலா ரவிச்சந்திரன், வேதநாயகி ஆளவந்தார், எழிலரசி ஏழுமலை, பலராமன், ராஜசக்தி, கோபிநாத், தங்கராசு, திருமலை, சந்திரன், செந்தில் முருகன், விஜயராகவன், ரவிச்சந்திரன், செந்தில்குமார், சிவகாமி, ராஜா, காதர் நவாஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

கூட்டத்தில் 22. 10. 2023 அன்று திருவண்ணாமலையில் நடைபெறும் BLA2 மண்டல மாநாட்டிற்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்வது தொடர்பாகவும்,

டிசம்பர் 17 சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் தி.மு.க.வினர் திரளாக கலந்து கொள்வது தொடர்பாகவும்,இல்லம்தோறும் சென்று இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் தொடர்பாகவும், வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் மற்றும் கழக ஆக்க பணிகள் மேற்கொள்வது எனவும் ஆலோசிக்கப்படுகிறது.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் ஒலக்கூர் சொக்கலிங்கம், ஒலக்கூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் ராஜாராமன், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், ஒன்றிய செயலாளர்கள் பழனி, ரவிச்சந்திரன், திண்டிவனம் நகரச் செயலாளர் கண்ணன் ஆகியோர் செய்து வருகின்றனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், ஓமாந்தூரில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நேற்று முன்தினம் (15.10.2023) நடைபெற்ற சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு, கால்நடைகளுக்கு மருந்துகள் வழங்கி, சிறப்பான முறையில் கால்நடைகளை பராமரித்த உரிமையாளர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப்குமார், மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சீ.கதிரவன், செ.ஸ்டாலின் குமார், மாவட்ட ஊராட்சி தலைவர் த.ராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சு.தேவநாதன், வைரமணி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரிணி, மண்ணச்சநல்லூர் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.ஸ்ரீதர், கால்நடை மருத்துவர்கள், பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே முன்னிலையில் இருப்பதற்கு - பெண்கள் முன்னேற்றத்துக்கு பெரியார் - அண்ணா - கலைஞர் அமைத்துக் கொடுத்த அடித்தளமே காரணம்!

# மகளிர் உரிமை - சமத்துவத்திற்காகக் குரல் கொடுத்த, பாடுபட்ட கலைஞரைப் போற்ற வேண்டும்!

## மகளிர் உரிமை மாநாட்டில் - அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி பேச்சு!

சென்னை, அக். 17-

**சென்னையில், அக். 14 அன்று மாலை, கழக மகளிர் அணி சார்பில் பிரம்மாண்டமாக நடைபெற்ற, "மகளிர் உரிமை மாநாட்டில்" கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி அவர்கள், இந்தியாவிலேயே "தமிழ்நாடு இன்றைக்கு முன்னிலையில் இருப்பதற்கு, பெண்கள் முன்னேற்றத்துக்காக பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் அமைத்துக் கொடுத்த அடித்தளமே காரணம்" என்றும் "மகளிர் உரிமை, சமத்துவத்திற்காகக் குரல் கொடுத்த, பாடுபட்ட கலைஞர் அவர்களைப் போற்ற வேண்டும்!" என்று குறிப்பிட்டார்.**

இம்மாநாட்டில் பிரியங்கா காந்தி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

"மகளிர் உரிமை மாநாட்டில் பங்கேற்கும் அரிய வாய்ப்பை மிகுந்த பெருமையாகவும் அங்கீகாரமாகவும் நான் கருதுகிறேன் அதோடு பல்வேறு சிறப்புகள் கொண்ட தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஒட்டி இந்த சிறப்பு மாநாட்டில் உங்களையெல்லாம் சந்திப்பது எனக்கு நிறைவைத் தருவதாகும்."

**தமிழக மகளிரின் மனதை நான் உணர்ந்தேன்!**

ஏறத்தாழ 32 ஆண்டுகளுக்கு முன்பாக சென்னை வருகை தந்த நாள் என் வாழ்வில் மறக்க முடியாதது ; நினைவை விட்டு நீங்காதது. 19 வயதான நானும், எனது தாயார் சோனியா காந்தியும் விமானத்தில் சென்னைக்கு இரவில் வந்தடைந்தோம். எங்களை இருள்தான் வரவேற்றது. ஆனால், எதைப்பற்றியும் நினைக்கவோ; சஞ்சலப்படவோ என் மனதில் இடமில்லை. ஏனென்றால் சில மணி நேரத்திற்கு முன்புதான் எங்களால் இன்னமும் மறக்கமுடியாத கொடும் சம்பவம் அரங்கேறியிருந்தது; தமிழகத்திற்கு வந்த என் தந்தை ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட துயரச்சம்பவம் அது.

விமானத்திலிருந்து என் தாயுடன் எதுவும் பேசமுடியாமல் இதயக் குமுறலோடு வெளியில் நடந்தோம். மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து வந்தபோது தனிமையை உணர்ந்தோம்; அப்போது அங்கு பணியாற்றும் நீலநிற சேலையணிந்த பெண்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டனர். அவர்கள் என் தாயாரின் கையைப் பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதபடி ஆறுதல் கூறினர். "எங்களின் அன்புக்குரிய ராஜீவ் காந்தியை இழந்துவிட்டோமே" என்று அந்தப் பெண்கள் வேதனையோடு புலம்பியது, இன்னும் என் காதில் ஒலிக்கிறது. கலங்கிய கண்களோடு இருந்த அந்தப் பெண்களின் உணர்வு என்னை நேசிக்க வைத்தது. தமிழக மகளிரின் மன உணர்வை நான் உணர்ந்தேன் அப்போது.

தமிழகப் பெண்கள் காட்டிய அந்த அன்பின் வெளிப்பாடு சொற்களால் விளக்க முடியாதது. மனதை விட்டு நீங்கவும் செய்யாது. தமிழக மகளிரே ! நீங்கள் தான் எனது அம்மா : எனது சகோதரிகள் ஆவீர்கள். இந்த மாநாட்டில் உங்களோடு நான் இருப்பதை பெருமையாக நினைக்கிறேன்.

சகோதரிகளே! நாம் செல்வந்தர்கள் அல்லது வறியவர்கள் என்ற ஒப்பீடு எல்லாம் அவசியமில்லை. எங்கு வசிக்கிறோம் என்பது முக்கியமில்லை. எவ்வளவு படித்தோம் என்பதும் கருதத்தக்கதல்ல. எத்தகைய சந்தர்ப்பங்களை நாம் எதிர்கொண்டோம் என்பதும் கணக்கல்ல. நாம் நமது குடும்பத்தின் அடித்தளம் ஆவோம்.



**மகளிரின் உந்து சக்தியே நாட்டின் எதிர்காலம்!**

ஒரு கட்டிடம் உருவாக செங்கற்களை அடுக்கி வடிவம் கொடுப்பது போல, நாம் ஒருங்கிணைந்து இந்தச் சமூகத்தைத் தாங்கிப் பிடிக்கிறோம். இதை மன உறுதியோடு நாம் மேற்கொள்கிறோம். தலைமுறை தலைமுறையாக நம்முடைய மேலான இயல்புகளால் உரமூட்டி தொலைநோக்கோடு செயல்படுவது பெருமையாகும். நாட்டின் எதிர்காலத்தை பிரகாசிக்க செய்யும் விதத்தில் கோடான கோடி மகளிரின் உந்து சக்தி உள்ளது.

நாம் அன்பைப் போதிக்கிறோம். நம் குழந்தைகளுக்கு நல் இயல்புகளை போதித்து உருவாக்கி வருகிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கி நாம் பயணப்படும் காலம் இது. நாம் ஒவ்வொருவரும் பிரகாசமான எதிர்காலம் என்ற விளக்கை ஏந்தி, சூரிய ஒளியின் பின்னணி போலக் கொண்டு நாம் பயணப்படுகிறோம்.

**பெண் ஏன் அடிமையானாள்?**

வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ் மண்ணிலிருந்து தந்தை பெரியார், "பெண் ஏன் அடிமையானாள்?" என்ற வினாவோடு புத்தகத்தை எழுதினார். தமிழகம் சமூக மாற்றத்திற்கான புரட்சியைத் துவக்கத் தூண்டிய இடம். அப்படி சமூக மாற்ற வித்தை தமிழகத்தில் விதைத்த தந்தை பெரியார், சமூக ஏற்றத்தாழ்வுகள் பொருளாதார முரண்பாடுகளால் பெண்கள் அடிமை நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி அதிகமாக பேசினார், எழுதினார். அவர் எழுப்பிய கேள்வி இன்னமும் அப்படியே நீடிக்கிறது.

சமூக மாற்றத்திற்கான புரட்சி தோன்றிய தமிழகத்திலிருந்து மகளிர் உரிமைக்காகக் குரல் கொடுக்கிறோம். அவர்தான் தமிழகத்தில் மகளிர் மேம்பாட்டிற்கான தூண்டுதல் வேட்கையை உருவாக்கியவர். எத்தனையோ ஆண்டுகள் கடந்தாலும் இன்னும் மகளிர் சமத்துவம் பெறவில்லை, அடிமை நிலை நீடிக்கிறது என்ற வினா எழுப்பும் சூழ்நிலைதான் இன்னும் நீடிக்கிறது. இன்னும் பெண்களின் அதிகாரம் பறிக்கப்படும் நிலைமை உள்ளது.

> **ச**மூக மாற்றத்திற்கான புரட்சி தோன்றிய தமிழ்நாட்டிலிருந்து – இன்று மகளிர் உரிமைக்காகக் குரல் கொடுக்கிறோம்! கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெறும் இம்மகளிர் மாநாட்டில் கலந்து கொள்வது எனக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது!

**மாற்றத்தை நோக்கி நமது உழைப்பு இருக்க வேண்டும்!**

இந்திய மக்கள் தொகையில் மகளிர் எண்ணிக்கை மிக அதிகம். அவர்கள் இந்த நாட்டின் தூண்கள். ஆனால் அவர்கள் இன்னும் சமத்துவத்தை எட்டவில்லை. இதற்காக நாம் காத்திருக்க வேண்டிய காலம் இனி இருக்கக்கூடாது. முழுமையான சமத்துவமே நமது இலக்காக இருக்க வேண்டும். மாற்றத்தை நோக்கி நம் உழைப்பு இருக்க வேண்டும். அதற்கான காலகட்டம் இது. அதுவே உரிமை மாநாடாக இங்கே நடைபெறுகிறது. இந்தத் தருணத்தில் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறைந்ததா என்பதை நினைக்காமல் இருக்க முடியவில்லை. அவர்களுக்கு எதிரான போக்கு, அடக்கு முறை, அதிகாரப்பறிப்பு இன்னும் நீடிப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமக்கு நாமே பாதுகாப்பு, நமக்கு நாமே கவசம் என்ற சிந்தனையோடு பெண்கள் தங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். நாம் இவற்றை எல்லாம் கடந்து வந்தாலும், துணிச்சலாக எதிர்கொண்டாலும், நம்மைச் சமத்துவம் மிக்கவர்களாக உருவாக்க காலம் கனிய வேண்டும்.

**நமது உரிமையை மீட்டெடுப்போம்!**

எந்தவிதப் பாகுபாட்டையும் நாம் ஏற்கக் கூடாது, அனுமதிக்கக்கூடாது , அர்ப்பணிப்பு உணர்வோடு நம் செயல்பாடு இருக்க வேண்டும். நாம் நமது உரிமையை மீட்டெடுப்போம். நமது முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணையாய் அமையும். அதற்கான அடித்தளத்தை பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் அமைத்துச் சென்றுள்ளனர். இந்தப் பின்னணியால் தமிழகம் இந்தியாவில் முன்னிலையில் உள்ளது. ஆனாலும், பெண் ஏன் அடிமை என்ற கேள்விக்கு இன்னும் முழுமையான விடை இல்லை. இதற்கான சரியான பதில் நாம் நமது உரிமையைப் பெற்று வாழ்வில் மாற்றத்தைக் காணவேண்டும். இத்தகைய அணுகுமுறை குறித்து இப்போது அதிகமாகப் பேசப்படுகிறது இதை அரசியல் கட்சிகளும் உணர்ந்துள்ளன ; பேசியும் வருகின்றன.

**பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் விடை காண வேண்டிய நேரம் இது!**

ஆனாலும், நமக்கு உரிய உரிமையைத் தருவதில் இன்னும் முழுமையான அக்கறை வரவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. அதனால் சகோதரிகளே! நாம் நமது உரிமைக்காகக் குரல் கொடுப்போம். பெண்களுக்கான இட ஒதுக்கீடு சட்டத்தை உடனே அமுல்படுத்துவது காலத்தின் கட்டாயம். அரசியலில் ஒரு அங்கமாக நம்மைக் கருதி நமது மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் அந்தச் சட்டம். நம் மதிப்பை உணரவைக்கும். நமது பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. அதற்கு நாம் விடை காண வேண்டிய நேரம் வந்துவிட்டது. நமது கூட்டு உறவே அதற்கான வெற்றியைக் கொண்டுவரும். ஒவ்வொரு மகளிருக்கும் தங்கள் உரிமையைக் கோருவதற்கான அங்கீகாரம் உண்டு.

**உரிமைக்காக குரல் கொடுப்போம்!**

எங்கே எந்தச் சூழலில் நீங்கள் இருந்தாலும் ஒருவருக்கு ஒருவர் உதவும் பண்பு சகோதரப் பாசம், ஒருவருக்கு ஒருவர் என்ற ஒருங்கிணைப்பு நம்மை உயர் மதிப்பீடு கொண்டவர்களாக நினைக்கும், இதுவே வெல்லும்.

நாம் ஒருங்கிணைந்தால் நம்மை மிஞ்ச யாருமில்லை. மாற்றத்திற்கான தருணமாக இதை நாம் நினைக்கும் வேளையில், மகளிர் உரிமை சமத்துவதிற்காக குரல் கொடுத்த தலைவர் கலைஞரைப் போற்ற வேண்டும். விழிப்போடு மகளிர் உரிமைக்காக்கக் குரல் கொடுப்போம், ஒளிமயமான எதிர்காலம் காண்போம்.

இவ்வாறு பிரியங்கா காந்தி பேசினார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்...!

முதல் பக்கத் தொடர்ச்சி

விண்ணில் ஏவச் செய்தார்.

அவரது இத்தகைய வியக்கதக்க செயலைப் பாராட்டி ஒன்றிய அரசு இவருக்கு 1981 ஆம் ஆண்டு இந்தியாவின் பெருமைமிகு விருதான "பத்ம பூஷன்" விருது வழங்கி கௌரவித்தது. 1963 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை, இந்திய விண்வெளி ஆராய்ச்சி கூடத்தில் பல பணிகளை சிறப்பாக செய்த இவர், 1998 ஆம் ஆண்டு பொக்ரான் அணு ஆயுத சோதனையில் முக்கிய பங்காற்றியுள்ளார். "இந்தியாவின் ஏவுகணை நாயகன்" என்றும் "அணுசக்தி நாயகன்" என்றும் அவர் போற்றப்பட்டார்.

இந்தியாவின் 11 வது குடியரசு தலைவராக ஜுலை 25 ஆம் நாள் 2002ல் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பதவியேற்றார். 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

மாணவர்களிடம் மிகுந்த அன்பு கொண்ட டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், "கனவு காணுங்கள், அந்தக் கனவு உறக்கத்தில் வரும் கனவாக இருக்கக் கூடாது. உறக்கத்தை விரட்டும் கனவாக இருக்க வேண்டும்" என்று மாணவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டினார். டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் அக்னி சிறகுகள், இந்தியா 2020 போன்ற பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். மேலும், 1990-ஆம் ஆண்டு 'பத்ம விபூஷண்' விருது, 1997-ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருது போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர் ஆவார்.

இத்தகைய பல்வேறு சிறப்புகளைக் கொண்ட டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களுக்கு சிறப்பு சேர்க்கும் வகையில், சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் புதிதாக நிறுவப்ப ட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் திருவுருவச் சிலையை முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு. மகேஷ்குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா. செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ட்விட்டர் பதிவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**பெருமைமிகு அரசுப் பள்ளியில் பயின்று தனது அறிவுத் திறத்தால் நாட்டின் முதல் குடிமகனான அறிவியலாளர் அப்துல்கலாம் அவர்களின் பிறந்தநாளில், அவர் பயின்று - பயிற்றுவித்த அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் அவரது திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தேன்.**

**படித்து முன்னேறும் இந்த இளைஞர் பட்டாளத்தின் தன்னம்பிக்கை, அப்துல் கலாம் அவர்களின் நம்பிக்கையை நிச்சயம் காப்பாற்றும்! அறிவியல் பார்வையோடு உலக அரங்கில் INDIA சிறந்து விளங்கும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

திருவண்ணாமலை மாவட்டத்தில் – சாலை விபத்தில்

## உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 17 -

திருவண்ணாமலை மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பான, முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பக்கிரி பாளையம் காந்திநகர்பகுதி, திருவண்ணாமலை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் (15.10.2023) காலை காரும், லாரியும் எதிர்பாராதவிதமாக நேருக்குநேர் மோதி ஏற்பட்ட விபத்தில் சம்பவ இடத்திலேயே இரண்டு குழந்தைகள் உட்பட ஏழுபேர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் படுகாயமடைந்து திருவண்ணாமலை அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சிங்கப்பூருக்கு வருகை தந்த மயிலாடுதுறை மாவட்ட செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா முருகனை சிங்கப்பூர் தி.மு. கழகத்தினர் நரசிம்மன் நரேஸ், கணேசசேகர், விமல்பாண்டியன், ஆரீப், அமல்ராஜ், இலியாஸ் மற்றும் கழகத்தினர் வரவேற்று நினைவு பரிசு வழங்கினார்கள்.

---

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் நல்வாழ்த்துகளுடன் - கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர்

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் புதல்வி மணவிழா!

### அமைச்சர்கள் – கழக முன்னணியினர் வாழ்த்து!

*சென்னை, அக். 17- கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் -வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் - செந்தமிழ்ச் செல்வி ஆகியோரின் புதல்வி டாக்டர் எம். ஆர்.கே.பி.கண்மணிக்கும், சென்னை - கீழ்ப்பாக்கம் லான்டன்ஸ் ரோடு ஆர். கார்த்திக் - நீதியரசர் திலகவதி ஆகியோரின் புதல்வர் டாக்டர் கே. சித்தார்த்துக்கும் மணவிழா 25.10.2023 - புதன்கிழமை அன்று காலை 9 மணிக்கு, சென்னை திருவான்மியூர், ஸ்ரீராமச் சந்திரா கன்வென்ஷன் சென்டரில் நடைபெறுகின்றது.*

*முன்னதாக மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 24.10.2023 செவ்வாய்க் கிழமை அன்று மாலை 6 மணிக்கு கலை இல மணி சென்னை வானொலி புகழ் அ.பார்த்திபனின் நாதஸ்வர இசை வாத்திய குழுவினரின் மங்கள இசைநிகழ்ச்சியுடன் நடைபெறுகின்றது.*

*இம்மணவிழா மற்றும் மணவிழா வரவேற்பில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், இந்நாள் ஒன்றிய, மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தோழமைக் கட்சித் தலைவர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*மணவிழாவிற்கு வருகை தருவோரை கடலூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.கதிரவன் வரவேற்கிறார்.*

*மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நன்றி கூறுகிறார்.*

---

### தி.மு.க. இலக்கிய அணி

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு

**க**ழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை தெற்கு மாவட்டம்**

**புரவலர்** : எம்.எஸ்.மணி, 42, 4லது தெரு, ராகவன் காலனி, அசோக் நகர், சென்னை600083.

தலைவர் சுப. முத்துவேல் 41, சத்தியமூர்த்தி தெரு, தேவராஜ் நகர், சாலிகிராமம், சென்னை 600093.

**துணைத் தலைவர்** : டி.எஸ். ரவிச்சந்திரன் 25/12/3, இளையாழ்வார் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

**அமைப்பாளர்** கொட்டிவாக்கம் ம. பார்த்திபன், 3/79, முத்தாலம்மன் கோயில் தெரு, கொட்டிவாக்கம், குப்பம் தெரு, சென்னை 600041.

**துணை அமைப்பாளர்கள்**: ஏ.எஸ். பழனி 19/8, பி.கே. மேஸ்திரி தெரு, நியூ காலனி, சைதாப்பேட்டை, சென்னை 600015. பு. ஜவகர்தீன் 18, புதுதெரு, மசூதி காலனி, கிண்டி, சென்னை 600032. வெங்கடேசன் 5, வடக்கு மாட வீதி, கோயம்பேடு, சென்னை 600107. என். மாதவன் 6, முத்துமாரியம்மன் கோவில் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை 600078. ஜி. மூர்த்தி 5/304, முகப்பேர் மேற்கு, சென்னை - 600037. மா.பா. சித்ராலயம் 4/6, பிள்ளையார் கோயில் தெரு, காரம்பாக்கம், சென்னை 600116. மு.பா. நடராஜ் 282, மல்லிகைபூ நகர், அடையார், சென்னை - 600020. ந. நீலகண்டன் 25/62, மதியழகன் தெரு, நேரு நகர், வேளச்சேரி, சென்னை 600042. கே. முத்து 36, வீரவாஞ்சிநாதன் தெரு, பெருங்குடி, சென்னை 600096. தே. புருஷோத்தமன் 8, தேவர் தெரு, அம்பேத்கர் புரட்சி நகர், பெருங்குடி, சென்னை 600096. ஜி. விஜய்கண்ணன் 4/382, ராம்கார்டன், பாலவாக்கம், சென்னை 600041. எம். குருசாமி 3/27, காந்தி சாலை, செம்மஞ்சேரி, சென்னை 600119. க. துரைராஜ் 1752, டி.என்.எச்.பி. காலனி, அயப்பாக்கம், சென்னை 600077. எஸ். முனுசாமி 1/224, 2வது குறுக்குத் தெரு, அபிநந்தன் நகர், நன்மங்கலம், சென்னை 600129. சென்னை அரங்கநாதன் 128, ராணி அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை 600078.

**கரூர் மாவட்டம்**

**தலைவர்** : எம். அரியநாயகம் எண். 181/எ, தியாகி இல்லம், வாங்கல் அஞ்சல், மணிமங்கலம் (தா), கரூர் 639114

**துணைத் தலைவர்** : க.ப. பாலசுப்பிரமணியம் 22, தேர் வீதி, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் 639001.

**அமைப்பாளர்** : புலவர் அ. அருணா பொன்னுசாமி, 24/7, அண்ணா நகர் இரண்டாம் தெரு, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் 639001.

**துணை அமைப்பாளர்கள்** : நா. பத்துமலை காஞ்சேரிக்கா வலசு, கார்வழி அஞ்சல், புகளூர் தாலுக்கா, கரூர் மாவட்டம். பா. எழில்வாணன் கோவில் தெரு, அண்ணா நகர், அரவக்குறிச்சி தாலுக்கா, கரூர் மாவட்டம். ப. செல்வராஜ் 27/820, பள்ளபாளையம், பள்ளபாளையம் அஞ்சல், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம் 639002. ம. வீரப்பன் 11/19, பூவாயிபட்டி, கள்ளை அஞ்சல், குளித்தலை தாலுக்கா, கரூர் மாவட்டம் 639110. முனைவர் பி. சுரேஷ்பிரபு 83/எ, மாரியம்மன் கோவில் தெரு, வேடிச்சிபாளையம் அஞ்சல், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம் 639114.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 13.10.2023

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்,
தி.மு.க. இலக்கிய அணி

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை ப. நாராயணசாமி

**அக்டோபர் 17 (1993)**



**'தஞ்சை மாவட்ட பெரியார்' என்று போற்றப்பட்டவர்.**

**மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்பட பணியாற்றியவர்.**

**தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.**

**தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது "பெரியார் விருது" பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## நீண்ட தமது அரசியல் பொது வாழ்வில், குரலற்றவர்களின் குரலாக ஒலித்தவர் -

# முத்தமிழறிஞர் கலைஞரின் திட்டங்கள்; சமூக நீதிக்கான சமகால சாட்சியங்கள்!

## ‘நியூஸ்-18 தமிழ்நாடு’ செய்திகள் தொலைக்காட்சி வெளியிட்ட சிறப்பு வீடியோ தொகுப்பு!

**‘நியூஸ் - 18 தமிழ்நாடு’ செய்திகள் தொலைக்காட்சியில், 14.10.2023 - சனிக்கிழமை அன்று இரவு, ‘கதையல்ல; வரலாறு’ எனும் பகுதியில் ‘குரலற்றவர்களின் குரல்’ எனும் தலைப்பில் - தமிழினத் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குப் புகழ் மாலை சூட்டும், சிறப்பு வீடியோ தொகுப்பு வெளியிடப்பட்டது.**

**அதில் - கலைஞர் அவர்களின் நெடிய அரசியல் பொது வாழ்வைப் பாராட்டி படிக்கப் பெற்ற கருத்தோவியம் வருமாறு:-**




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடையாளங்களுள் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது அவரது கரகரத்த குரல். என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே என்று தொடங்கும் அந்தக் குரலைக் கேட்பதற்கு ஏங்கியவர்கள் ஏராளம். அந்தக் குரலைக் கேட்பதற்கென்றே கால்கடுக்கக் காத்திருந்தவர்கள் ஏராளம். அந்தக் குரலின் வழியாகக் கவிதை வந்தாலும் ரசிப்பார்கள், கருத்துரை வந்தாலும் ஏற்பார்கள், அறிவுரை வந்தாலும் கேட்பார்கள். ஆழமான ஆலோசனை வந்தாலும் பரிசீலிப்பார்கள். கடுமையான விமர்சனம் வந்தாலும் கவனம் செலுத்துவார்கள்.

அவருடைய அந்தக் கரகரத்த குரல் திராவிட இயக்கத்தின் கொள்கைகளைக் கொண்டு சேர்க்கும் குரலாக, தமிழ்நாட்டின் மூலை முடுக்களில் எல்லாம் ஒலித்திருக்கிறது. தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்குரலாக தமிழ்நாட்டுக்கு அப்பால் டெல்லி வரை ஒலித்திருக்கிறது. தி.மு.க. தொண்டர்களுக்கு நம்பிக்கை தரும் குரலாகத் தலைமுறைகள் கடந்து ஒலித்திருக்கிறது. இவையெல்லாமே அரசியல் குரல்கள். ஆனால் அரசியலுக்கு அப்பால் குரலற்றவர்களின் குரலாகப் பல தருணங்களில் ஒலித்திருக்கிறது கலைஞர் அவர்களின் குரல்.

### அது என்ன குரலற்றவர்களின் குரல்?

அரசாலும் சமூகத்தாலும் கண்டு கொள்ளப்படாதவர்கள், புறக்கணிக்கப் பட்டவர்கள், நிராகரிக்கப்பட்டவர்கள், பொருட்படுத்தப்படாதவர்களுக்குக் குரலற்றவர்கள் என்று பெயர். உதாரணமாக, ஊனமுற்றவர்கள் என்று சமூகத்தால் ஒருகாலத்தில் உதாசீனம் செய்யப்பட்டவர்கள் குரலற்றவர்கள். இயற்கையின் பிழையால் மாற்றுப் பாலினமாகப் பிறந்த காரணத்துக்காகச் சமூகத்தால் நிராகரிக்கப்பட்டவர்கள் குரலற்றவர்கள்.



பிச்சைக்காரர்கள் என்றும் தொழுநோயாளிகள் என்றும் அழுக்குப்பிடித்தவர்கள் என்றும் அநாதைகள் என்றும் இழிவானவர்கள் என்றும் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு, அரசாங்கத்தால் கண்டு கொள்ளப்படாதவர்கள் பலரும் குரலற்றவர்கள். நம்முடைய சுற்றத்தைச் சுத்தமாக வைத்திருக்க உதவும் தூய்மைப் பணியாளர்கள் பலரும் குரலற்றவர்களே. இன்னும் இன்னும் பல வகைகளில் ஒதுக்கலுக்கும் வெறுப்புக்கும் உள்ளானவர்கள் பலரும் குரலற்றவர்களே.

**அப்படிப்பட்ட குரலற்றவர்களின் எண்ணிக்கை வெகு சொற்பமாக இருக்கலாம். அவர்களது வாக்குகளுக்குத் தேர்தல் களத்தில் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் சக்தி இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல், அரசியல் லாப நட்டங்களைக் கணக்கிட்டுப் பார்க்காமல், அவர்களைத் தேடிச்சென்று, அவர்களின் பிரச்சினைகளை எல்லாம் கனிவோடும் கருணை யோடும் ஆய்வுசெய்வது சமூகநீதித் தத்துவத்தை உள்வாங்கிய ஆட்சியாளருக்கு முக்கியமானது.**

**அந்த வகையில் குரலற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டங்களைத் தீர்க்கமாகவும் தொலைநோக்குச் சிந்தனையுடனும் வகுத்து, முறையாக வும் சரியாகவும் செயல்படுத்தி, குரலற்றவர்களின் குரலாக ஒலித்தவர் கலைஞர் அவர்கள்.** அவருக்கு நூற்றாண்டு கொண்டாடப்படும் இந்தச் சமயத்தில் எந்தெந்த அம்சங்களில் எல்லாம் கலைஞர் அவர்கள் குரலற்றவர்களின் குரலாக அதிகாரபூர்வமாக ஒலித்தார் என்பதை இன்றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்கிறது இந்தச் சிறப்புத் தொகுப்பு.

### பிச்சைக்காரர் மறுவாழ்வு மையங்கள்!

அது 2021 ஆம் ஆண்டு. இந்திய உச்சநீதிமன்றத்திடமிருந்து ஒரு வித்தியாசமான தீர்ப்பு ஒன்று வெளியானது. இந்தியாவில் யாரும் விருப்பப்பட்டுப் பிச்சையெடுக்கவில்லை, வறுமையே அவர்களைப் பிச்சையெடுக்கத் தூண்டுகிறது. ஆகவே, பிச்சையெடுக்கத் தடை போடுவதைவிட அவர்களுக்கு மறுவாழ்வு மையம் ஏற்படுத்தித் தருவதே முக்கியம். அதைச் செய்து தருவது அரசின் கடமை என்பதுதான் முக்கியத்துவம் வாய்ந்த அந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பின் உள்ளடக்கம்.

**இங்கே வியப்பு என்னவென்றால், இப்படியொரு தீர்ப்பை இந்திய உச்சநீதிமன்றம் வெளியிடுவதற்கு அரை நூற்றாண்டுக்கு முன்னரே, தமிழ்நாட்டில் பிச்சைக்காரர் மறுவாழ்வு மையங்களை உருவாக்கிவிட்டது தமிழ்நாடு அரசு. ஆம், 1971-ல் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு தரும் திட்டத்தை அறிவித்து செயல்வடிவத்துக்குக் கொண்டுவந்திருந்தார் அயப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.**

பிச்சைக்காரர்களை அனுதாபத்தோடு அணுகி, பரிதாபத்துடன் பண உதவி செய்வதோடு நகர்ந்துகொள்வதே பொதுச் சமூகத்தின் வழக்கம். ஆனால் பிச்சைக்காரர்களை அப்படியே விட்டுவிடாமல், அவர்களுக்கு மறுவாழ்வு தர வேண்டும் என்று யாரும் குரல் எழுப்பிடாத நிலையில், அவர்களுக்குக் கைகொடுத்துக் காப்பாற்றிவிடும் திட்டத்தை பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத்திட்டம் என்ற பெயரில் கொண்டுவந்த



முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பிச்சைக்காரர் என்ற சொல்லைத் தவிர்த்து இரவலர் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.

புதிதாகக் கட்டப்பட்ட விடுதிகளில் பிச்சைக்காரர்கள் தங்கள் குடும்பத்தினருடன் வசிக்க ஏற்பாடு செய்து கொடுத்தார். அத்தோடு, அங்கே அவர்களுக்குப் பயிரிடுதல், தொழில் செய்தல் உள்ளிட்ட பயிற்சிகள் தரப்பட்டன. அவர்கள் உணவுக்காக வெளியே சென்று பிச்சை எடுக்காமல் இருக்கும் வகையில் விடுதிகளிலேயே உணவு தரப்பட்டது. கலைஞர் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு உருவாக்கிய பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டம் இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது என்றார் அப்போதைய தமிழ்நாடு ஆளுநர் கே.கே.ஷா.


### தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்!

உண்மையில், பிச்சைக்கார ர்களுக்கென்று யாரும் குரல் எழுப்பிடாத நிலையில் அவர்களுக்கான குரலாக ஒலித்த கலைஞர் அவர்கள் செய்த மற்றொரு காரியம் கூடுதல் கவனம் பெற்றது. நாம் செல்லும் வழியில் பிச்சைக்காரர்கள் தென்பட்டால் அருகில் சென்று உதவி செய்வோம். ஆனால் அதே பிச்சைக்காரர் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருந்தால், நாம் உதவி செய்யக்கூட அவரை நெருங்கமாட்டோம். இன்னும் சிலர் தொழுநோய்க்காரர்களைத் தெருவில் பிச்சை கூட எடுக்கவிடாமல் அடித்துவிரட்டுவர்.

அப்படி பிச்சை எடுக்கக்கூட அனுமதி மறுக்கப்பட்ட தொழுநோயாளிகளின் சூழலைப் புரிந்துகொண்டு, அவர்களுக்காகவும் திட்டத்தை வகுத்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதுதான் தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள். பிச்சைக்காரர்கள் போலவே தொழுநோயால் பீடிக்கப்பட்டு குடும்பத்தினரால் கைவிடப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்தோருக்காகப் பிரத்யேக இல்லங்கள் உருவாக்கித் தந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

குறிப்பாக, தொழுநோயால் பீடிக்கப்பட்டு, கை, கால் உள்ளிட்ட உடலுறுப்புகள் சிதிலமடைந்த பிச்சைக்காரர்கள் அந்த விடுதிகளில் அனுமதிக்கப்பட்டனர். முக்கியமாக, ஒவ்வொரு விடுதியிலும் மருத்துவ நிலையங்கள் அமைக்கப்பட்டு, தொழுநோய்க்குச் சிகிச்சை தரப்பட்டது. தொழுநோயிலிருந்து குணமடைந்தவர்கள் பிச்சை எடுக்க விரும்பாமல் வேறு தொழில் செய்ய விரும்பினால் விடுதியிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

செங்கல்பட்டு பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் தொழில் இயந்திரம் ஒன்றைத் தொடங்கிவைக்க வந்திருந்த அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, “தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுத்திட்டம் போற்றத்தக்க மனிதநேயத் திட்டம்” என்று பாராட்டினார். உண்மையில், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் என்பது வெறும் மக்கள் நலத் திட்டம் மட்டுமல்ல, சக மனிதனின் சுயமரியாதையைக் காப்பாற்றும் திட்டமும்கூட. குரலற்றவர்களின் குரலாக ஒலித்ததோடு, அவர்களுக்கான சுயமரியாதையை உறுதிசெய்யும் குரலாகவும் ஒலித்திருந்தார் கலைஞர் அவர்கள்.



சில சொற்கள் வெல்லும், சில சொற்கள் கொல்லும் என்பார்கள். அதுபோல, வெண்குஷ்ட நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அந்த நோயைவிட அந்த நோய்க்கான பெயர் அதிகமான வலியை கொடுத்தது. குஷ்ட ரோகி என்ற சொல் அவர்களைக் கூனிக்குறுக வைத்தது. அவர்களது உள்ளக்குமுறலைப் புரிந்து கொண்டு, வெண் குஷ்டம் என்று சொல்வதற்குப் பதிலாக வெண்புள்ளி நோய் என்று அழைக்க வேண்டுமென அரசாணை வெளியிட்டார் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள். குஷ்ட நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அந்த உத்தரவு கொஞ்சம் நம்பிக்கையைக் கொடுத்தது.

### கண்ணொளி வழங்கும் திட்டம்!

ஒருவருக்குக் கண் பார்வை இல்லாமல் போனால் ஒட்டுமொத்த எதிர்காலமும் இருண்டுபோனதற்குச் சமம். அதை உணர்ந்தே எழுபதுகளில் இலவச கண்ணொளி வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். மருத்துவர்கள் குழு கிராமம் கிராமமாகச் சென்று கேடராக்ட் உள்ளிட்ட கண் பிரச்சினை உள்ளவர்களையும் பார்வை இழந்தவர்களைத் தேடிச் சென்று, அவர்களுக்கு அறுவை சிகிச்சை உள்ளிட்டவற்றைக் கொடுத்து அவர்களுடைய கண் பார்வையை மீட்டுத் தந்தனர்.

பெரியவர்களுக்கு மட்டுமின்றி, மாணவ மாணவிகளும் அந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர். அந்த வகையில் கண்ணொளி இழந்த பெரியவர்களுக்குக் கண்ணொளியை மீட்டுத்தந்ததோடு, கண்ணொளி இழந்த மாணவர்களுக்குக் கண்ணொளியோடு சேர்த்து கல்வி ஒளியையும் தருவதற்கு ஏற்பாடு செய்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

### ‘நெஞ்சுக்கு நீதி’ சுயசரிதை வெளியீடு!

**இந்த இடத்தில் தனது சுயசரிதையான ‘நெஞ்சுக்கு நீதி’ புத்தகத்தின் முதல் பாக வெளியீட்டு விழாவை கலைஞர் அவர்கள் எப்படி நடத்தினார் என்று பார்க்கவேண்டும். அந்தப் புத்தக வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்தவர் பார்வை மாற்றுத் திறனாளியும் தமிழ்நாடு விழியிழந்தோர் சங்கத் தலைவருமான ஆசிர். நல்லதம்பி. புத்தகத்தை வெளியிட்டவர் தொழுநோயால் பீடிக்கப்பட்டு மீண்டு வந்தவரும் தொழு நோயாளிகள் மறுவாழ்வு சங்கத்தின் பொதுச்செயலாளருமான கவிஞர் முகமது அலி. புத்தகத்தின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டவர் கால் பாதிப்பால் நடக்கும் சக்தியை இழந்த செல்வி சாந்தகுமாரி.**

சில திட்டங்கள் எல்லா மக்களையும் சென்றுசேரும். அது அவர்களுக்குத் தேவையாக இருக்கலாம் அல்லது தேவைப்படாமலும் போகலாம். ஆனால் சில திட்டங்கள் வெகு சிலரை மட்டுமே சென்றடையும். ஆனால் அது அவர்களுக்கு அதிமுக்கியமான ஒன்றாக இருக்கும். அப்படித்தான் அரசு ஊழியர் இறுதிச் சடங்கு நிதி என்ற பெயரில் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

# தமிழ்நாட்டை நீண்ட பல ஆண்டுகள் ஆட்சி செய்து எல்லோருக்கும் பலனளிக்கும் ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தியவர் கலைஞர்!

## 'நியூஸ்-18 தமிழ்நாடு' செய்திகள் தொலைக்காட்சி வெளியிட்ட சிறப்பு வீடியோ தொகுப்பு!

4ஆம் பக்கத் தொடர்ச்சி




**அரசு ஊழியர் இறுதிச் சடங்கு நிதி!**

அரசு ஊழியர் ஒருவர் பணியிலிருக்கும்போது மரணம் அடைந்தால், அவருக்குரிய ஓய்வூதியம், வாரிசுக்கு வேலை உள்ளிட்ட எல்லாச் சலுகைகளும் முறைப்படி கிடைப்பதற்குக் கால அவகாசம் எடுக்கும். ஆனால் இறந்த அரசு ஊழியருக்கு இறுதிச்சடங்கு செய்வதற்குத் தேவையான நிதி அவரது குடும்பத்தினரிடம் இல்லாதபட்சத்தில் அது பெரும் சோகம். உடலை அடக்கம் செய்வதற்கு அடுத்தவரின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும்.

அப்படியொரு நெருக்கடி அரசு ஊழியரின் குடும்பத்தினருக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக அரசு ஊழியர் இறுதிச் சடங்கு நிதி என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்படி அரசு ஊழியர் இறந்துவிட்டால், அவரது குடும்பத்தினருக்கு உடனடியாக ஐந்தாயிரம் ரூபாய் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அது பின்னாளில் கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டுவிட்டது என்றாலும் அதற்கு ஆரம்பப் புள்ளி வைத்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்து, நுட்பமாக யோசித்துக் கொண்டு வரப்பட்ட திட்டம் அது.

சமூகத்தின் நிலையை ஆட்சியாளர்கள் எந்தக் கண்ணாடி போட்டு அணுகுகிறார்கள் என்பதில்தான் அந்தச் சமூகத்துக்கான நீதி இருக்கிறது. அப்படி சமூகநீதிப் பார்வையுடன் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்தான் ஐம்பது வயதைக் கடந்தும் திருமணம் ஆகாமல், ஆதரவின்றி வறுமையில் வாடும் பெண்களுக்கான உதவித் தொகை. அவர்கள் எண்ணிக்கையில் வெகு சொற்பமாக இருப்பார்கள். ஆனாலும் அவர்களது வாழ்க்கை, எதிர்காலம் கருதி அவர்களுக்கான உதவித்தொகை திட்டத்தைக் கொண்டுவந்திருந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.




**டாக்டர் தர்மாம்பாள் நினைவு கைம்பெண்கள் மறுமண உதவித் திட்டம்!**

கணவனை இழந்த பெண்கள் காலம் முழுக்க தனியாகவே வாழவேண்டும் என்பது காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்ட மோசமான நடைமுறை. தவிரவும், அவர்களை அபசகுணமாகப் பார்ப்பதும், நல்ல காரியங்கள் நடக்கும்போது ஒதுக்கிவைப்பதும், நல்ல காரியங்கள் நடக்கும்போது தப்பித்தவறி எதிரில் வந்துவிட்டால் அவர்களை வசைபாடுவதும் எந்தவொரு குற்றவுணர்ச்சியும் இல்லாமல் புழக்கத்தில் இருந்தவை. ஒருவேளை, எதிர்காலம் கருதி அந்த விதவைகள் மறுமணம் செய்துகொள்ள எத்தனித்தால் அதற்கும் தடைக்கல்லைப் போட்டது பொதுச்சமூகம். சமூகத்தால் கண்டுகொள்ளப்படாதது ஒரு வகை என்றால் சமூகத்தால் முட்டுக்கட்டை போடப்படுவது மறுவகை.

ஆனால் அதைப் போன்ற மனித உரிமை மீறல், சமூகநீதிச் சுரண்டல் எதுவுமில்லை என்ற அடிப்படையில், விதவைத் திருமணங்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய நிதியுதவித் திட்டத்தைக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். டாக்டர் தர்மாம்பாள் நினைவு கைம்பெண்கள் மறுமண உதவித்திட்டம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டத்தின்படி பட்டப்படிப்பு படித்த பெண்களுக்கு 30000 ரூபாய் காசோலை 20000 ரூபாய் சேமிப்புப் பத்திரமும், மற்ற பெண்களுக்கு 15000 ரூபாய் காசோலை - 10000 ரூபாய் சேமிப்புப் பத்திரமும் வழங்கப்பட்டது.

**மாற்றுத் திறனாளிகள் நலவாரியம்!**

ஊனமுற்றவர்கள் என்ற சொல் தொடர்ச்சியாகப் புழக்கத்தில் இருந்தபோதும், அது ஏற்படுத்திய மனக்காயம் மிகப் பெரியது. அதை உணர்ந்துகொண்ட முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஊனமுற்றோர் என்ற சொல்லுக்குப் பதிலாக மாற்றுத் திறனாளிகள் என்ற சொல்லைப் பயன்படுத்த சட்டரீதியான உத்தரவைப் பிறப்பித்தார். இயற்கையாகவோ, செயற்கையாகவோ அவர்கள் உடல்ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும், அதை ஈடுசெய்யக்கூடிய அளவுக்கு அவர்களுக்குள்ள மாற்றுத்திறன்களை அங்கீகரிக்கும் வகையில் பெயர் கொடுத்திருந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். மாற்றுத் திறனாளிகளுக்குப் பெரும் நம்பிக்கையையும் ஊக்கத்தையும் கொடுத்த உத்தரவு அது. முக்கியமாக, மாற்றுத்திறனாளிகளைக் கருணையோடு அணுகி, அவர்களுக்கான கண்ணியத்தை உறுதிசெய்திருந்தது அந்த உத்தரவு.

வெறுமனே பெயர் வைத்ததோடு நில்லாமல் மாற்றுத் திறனாளிகள் நலவாரியம் கொண்டுவர சட்டம் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். பிறகு மாற்றுத் திறனாளிகள் நலனுக்காகத் தனித்துறையே உருவாக்கப்பட்டது. அதன் நீட்சியாக சென்னைக்கு அருகில் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய மையங்கள் உருவாக்கப்பட்டன. மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டது.

மாற்றுத் திறனாளிகளுக்கான கல்விக் கடன்கள் ரத்து, திருமண நிதியுதவி, அரசுப் பேருந்தில் கட்டணச் சலுகை, அரசு ஊழியர்களாக உள்ள மாற்றுத் திறனாளிகளுக்குக் கூடுதல் பயணப் படி, இலவச மூன்று சக்கர வாகனம், வீட்டு வசதி வாரியம் - குடிசை மாற்று வாரியம், சமத்துவபுரத்தில் 3 சதவிகித வீடு ஒதுக்கீடு, மாற்றுத் திறனாளிகளின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை என மாற்றுத் திறனாளிகளின் நலனை உறுதிசெய்யும் பல திட்டங்களைத் தமது ஆட்சியில் கொண்டுவந்தார் கலைஞர் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா கடிதங்கள் எழுதும்போது தம்பி என்றே அழைத்து எழுதுவார். ஆனால் கலைஞரின் கடிதங்கள் உடன்பிறப்பே என்றுதான் தொடங்கும். சற்று நுட்பமாகப் பார்த்தால் தம்பி என்ற சொல் ஆண்பாலுக்கு மட்டுமே உரியது. ஆனால் உடன்பிறப்பே என்ற சொல் ஆண்பால், பெண்பால், மாற்றுப்பால் என்ற முப்பாலுக்கும் பொருந்தக்கூடியது. ஆம், அண்ணனுக்கும் பொருந்தும், தம்பிக்கும் பொருந்தும், அக்காளுக்கும் பொருந்தும், தங்கைக்கும் பொருந்தும், திருநங்கைக்கும் பொருந்தும், திருநம்பி க்கும் பொருந்தும். அந்த வகையில் கலைஞர் அவர்கள் பயன்படுத்திய உடன்பிறப்பே என்ற சொல் பாலின சமத்துவத்தின் குறியீடு.

## உச்சநீதிமன்றம் தீர்ப்பு வெளியிடுவதற்கு அரை நூற்றாண்டுக்கு முன்னரேயே, இரவலர் மறுவாழ்வுத் திட்டத்திற்குச் செயல்வடிவம் தந்தவர் கலைஞர்!

**திருநங்கையர் நலவாரியம்!**

அந்தப் பாலின சமத்துவத்தைக் குறியீடாக மட்டுமே வைத்திருப்பதைவிட செயல்வடிவத்துக்குக் கொண்டுவருவதுதான் சரியாக இருக்கும் என்ற அடிப்படையில் மாற்றுப் பாலினத்தவர்களின் பிரச்சினைகளைக் கையிலெடுத்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். உண்மையில், மாற்றுப் பாலினத்தவர்களைக் குறிப்பிடுவதற்கு சமூகத்தில் பயன்பாட்டில் இருந்த சில சொற்கள் மாற்றுப் பாலினத்தவர்களைக் கடும் மன உளைச்சலுக்கு ஆளாக்கின. ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சொல்லைப் பயன்படுத்துவார்கள். ஆனால் எந்த ஒன்றுமே அவர்களுக்குரிய கண்ணியத்தை உறுதி செய்யவில்லை. மாறாக, அவர்களைக் காயப்படுத்தவே செய்தன.

காலம் காலமாகப் புழக்கத்தில் இருந்தபடி மாற்றுப் பாலினத்தவர்களின் சுயமரியாதையைச் சீண்டிவந்த அந்த சொற்களை அடியோடு நீக்கிவிட்டு, திருநங்கையர் என்ற புதிய சொல்லைச் சட்டரீதியாகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அடுத்து தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறையின் கீழ் திருநங்கையர் நலவாரியத்தை உருவாக்கினார். மாற்றுப் பாலினத்தவர்களின் உரிமைகளை அங்கீகரித்து, அவர்களது சுயமரியாதை உறுதிசெய்து, அவர்களுக்கான நலத்திட்டங்களை உருவாக்கும் பொறுப்பை திருநங்கையர் நலவாரியத்துக்குக் கொடுத்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

அதன்படி திருநங்கையருக்கு அடையாள அட்டை, குடும்ப அட்டை, தொகுப்பு வீடு, மருத்துவக் காப்பீடு அட்டை, சுய உதவிக்குழுக்கள், இலவச அறுவை சிகிச்சை, சுய தொழில் தொடங்க நிதியுதவி என்று மாற்றுப் பாலினத்தவர்களின் பாதுகாப்பு தொடங்கி வாழ்வாதாரம் வரை அனைத்துக்குமான திட்டங்கள் தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் இவையெல்லாம் நடந்து பல ஆண்டுகள் கழித்தே உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் திருநங்கைகளைப் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகக் கருத வேண்டும், அவர்களை மூன்றாம் பாலினத்தவர்களாக அங்கீகரிக்க வேண்டும், பேருந்து நிலையம் - ரயில் நிலையம் உள்ளிட்ட பொது இடங்களில் திருநங்கையர்களுக்குப் பிரத்யேக கழிவறைகள் ஏற்பாடு செய்யவேண்டும் என்பன போன்ற உத்தரவுகளைப் பிறப்பித்தது உச்சநீதிமன்றம்.

**விளையாட்டு வீராங்கனையை அங்கீகரித்த கலைஞர்!**

இந்த இடத்தில் பாலின சர்ச்சையில் சிக்கிய விளையாட்டு வீராங்கனை சாந்தியை முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள். அங்கீகரித்த விதத்தைக் குறிப்பிடவேண்டும். 2006ல் கத்தாரில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வென்றார் புதுக்கோட்டை சாந்தி. பிறகு அவருக்கு நடத்தப்பட்ட பாலின சோதனையின் முடிவு எதிர்மறையாக வந்ததால், அவரது பதக்கம் பறிக்கப்பட்டதோடு, அவர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கத் தடையும் விதிக்கப்பட்டது.

ஆனால் அந்தத் தடை விதிக்கப்படுவதற்கு முன்பே புதுக்கோட்டை சாந்திக்கு 15 லட்சம் ரூபாய் நிதியும், ஒரு லட்சம் ரூபாய் மதிப்பு கொண்ட தொலைக்காட்சியும் பரிசாகக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்பிறகு சர்ச்சைகள் வெடித்தபோதும் தனது முடிவை முதலமைச்சர் மாற்றிக்கொள்ளாமல், பந்தயத்தில் ஓடியது இந்தக் கால்கள்தானே என்று சொல்லி தமிழ்நாடு அரசின் சார்பில் சாந்திக்குப் பரிசுகள் கொடுத்தனுப்பினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

**நரிக்குறவர்கள் நல வாரியம்!**

சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் வரிசையில் நரிக்குறவர்கள் முக்கிய மானவர்கள். அவர்கள் தெருவில் சென்றால் அவர்களை அருவருப்பாகப் பார்ப்பதும், அடித்து விரட்டுவதும், வசைபாடித் துரத்துவதும் தொடர்கதையாக இருந்தது. குருவி சுடும் துப்பாக்கியோடும், ஊசி மணி பாசி மணியோடும், நரிக்கொம்புகளோடும், வசிப்பதற்கு வாழ்விடமில்லாமல் நாடோடிகளாகத் திரிந்த அவர்களுடைய நிலையை மாற்றும் முயற்சியில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இறங்கினார். குறிப்பாக, எழுத்தாளர் ரவிக்குமார் உள்ளிட்டோர் அவர்களது பிரச்சினைகளின் தன்மையை அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

2008ல் ஆட்சியில் இருந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு நரிக்குறவர்கள் நல வாரியத்தை உருவாக்கினார். நரிக்குறவர்களை நல்ல நெறிக்குறவர்கள் என்று அழைத்து, அவர்கள் பல்வேறு இடங்களுக்கும் அலைந்து திரியாமல், ஓரிடத்தில் வாழ வேண்டும் என்பதற்காகக் குடியிருப்புகள் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்தார். அந்த வகையில் சமூகத்தால் அவமதிக்கப்பட்டு, அரசாங்கத்தால் கண்டுகொள்ளப்படாமல் இருந்த நரிக்குறவர்களின் வாழ்வில் நல்ல மாற்றங்களைக் கொண்டுவந்தது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த நரிக் குறவர்கள் நல வாரியம்.



**நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்!**

சமூகத்தாலும் அரசாங்கத்தாலும் அதிகம் கண்டுகொள்ளப்படாதவர்கள் பட்டியலில் நாட்டுப்புறக் கலைஞர்களும் அடக்கம். வெள்ளித்திரையும் வண்ணத் திரையும் சின்னத்திரையு ம்தான் பொழுதுபோக்கு என்று மாறிவிட்ட உலகில், நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாப்பதும் நலிந்து போன நாட்டுப்புறக் கலைஞர்களைப் பாதுகாப்பதும் முக்கிய மானது என்பதை ஓர் ஆட்சியாளராக மட்டுமின்றி, ஒரு கலைஞராகவும் உளமாற உணர்ந்தவர் கலைஞர் அவர்கள். அதன் நீட்சியாகவே நாட்டுப்புறக் கலையும் கலைஞர்களும் அழிந்துவிடாமல் தடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தைக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

அறுபது வயதை எட்டிய நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு மாத ஓய்வூதியம், மரணமடைந்த நாட்டுப்புறக் கலைஞர்களுக்கான இறுதிச்சடங்கு நிதியுதவி மற்றும் வாரிசுக்கான நிதியுதவி, நாட்டுப்புறக் கலைஞர்களின் பிள்ளைகளுக்கான கல்வி உதவி, நாட்டுப்புறக் கலைஞர்களின் பிள்ளைகளுக்கான திருமண நிதியுதவி, பெண் கலைஞர்களுக்கான மகப்பேறு உதவி என்று பல்வேறு உதவி களைச் செய்துகொடுத்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.



**துப்புறவுப் பணியாளர்கள் நல வாரியம்!**

அருவருப்புடன் பார்க்கப்பட்டு அலட்சியமாக அணுகப்பட்டோர் பட்டியலில் துப்புரவுப் பணியாளர்கள் என்கிற தூய்மைப் பணியாளர்களும் உண்டு. நாம் அன்றாடம் புழங்குகின்ற தெருக்கள், சாலைகள் தொடங்கி நம்முடைய சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்து, நாம் சுகாதாரத்துடன் வாழ்வதற்கு ஆதாரமாக இருப்பவர்கள் தூய்மைப்பணியாளர்கள். கழிவுநீர் பிரச்சினை தொடங்கி கழிப்பறை பிரச்சினை வரை நாம் நாடுவது தூய்மைப் பணியாளர்கள்தான். ஆனால் அவர்களைச் சமூகம் அணுகும் விதமும் சரி, அழைக்கும் விதமும் சரி. மனிதத்தன்மைக்கு எதிரானது.

சாதிப்பெயர் சொல்லி அழைப்பது தொடங்கி கெட்டுப்போன உணவுப்பொருட்களைக் கொடுப்பது வரை சமூகம் அவர்களை அனுமதிப்பது தொடர்கதையாகவே இருந்தது. அசுத்தத்தைச் சரி செய்யும் பணியில் தம்மையே அசுத்தமாக்கிக்கொள்ளும் தூய்மைப் பணியாளர்களுக்காக 2007-ல் தமிழ்நாடு துப்புரவுப் பணியாளர்கள் நலவாரியத்தைக் கொண்டுவந்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்மூலம் அவர்களுக்கு முறையான அடையாள அட்டையை ஏற்பாடு செய்து, விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு உதவித்தொகை, இறுதிச்சடங்கு உதவித்தொகை, கல்வி - திருமண உதவித்தொகை, ஓய்வூதியம் என்று பல்வேறு உதவிகள் கிடைப்பதற்கு வழிவகை செய்தார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

**எல்லோருக்கும் பலனளிக்கும் திட்டங்கள்!**

1969 ஆம் ஆண்டு தொடங்கி 2011 வரை வெவ்வேறு காலகட்டங்களில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்திருக்கிறார். ஐந்து முறை ஆட்சி செய்திருக்கிறார். தமிழ்நாட்டை அதிக ஆண்டுகளுக்கு ஆட்சி செய்தவரும் அவரே. அந்த ஆட்சிக்காலங்களில் எல்லாம் ஏராளமான திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார். பெண்கள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், கிராமங்கள், நகரங்கள், ஏழைகள் என்று எல்லோருக்கும் பலனளிக்கும் பல திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறார்.

கைரிக்ஷாவை ஒழித்தது, இலவச கண்ணொளி, குடிசை மாற்று வாரியம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பெண்ணுக்குச் சொத்துரிமை, ஏழைப் பெண்கள் திருமண உதவித்திட்டம், இலவச ஆம்புலன்ஸ் சேவை, உழவர் சந்தை, சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கலைஞர் காப்பீட்டுத் திட்டம், சமச்சீர் கல்வித்திட்டம் என்று எத்தனையோ திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். ஆனால் குரலற்றவர்களின் குரலாக ஒலித்து கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டங்கள் ஒவ்வொன்றும் சமூகநீதிக்கான சமகால சாட்சியங்கள்!

நன்றி: 'நியூஸ்-18 தமிழ்நாடு'

# 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தஞ்சைப் பெரியார், முன்னாள் அமைச்சர்

## மன்னை ப.நாராயணசாமி

அவர்கள்



"எறும்பனையர் எம் மறவர் இன்னனையர் நம் மன்னை"
– பேரறிஞர் அண்ணா

"மன்னை எனது அன்னை"
– முத்தமிழ் அறிஞர் கலைஞர்

................ என்றும் உங்கள் வழியில் பேரன் ................

**மன்னை த.சோழராஜன் B.E.,**

நகர்மன்றத் தலைவர் – மன்னார்குடி

( மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் )



சென்னை மயிலாப்பூரில் திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் நவராத்திரி பெருவிழாவினை நேற்று முன்தினம் (15.10.2023) முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

மயிலை அருள்மிகு கபாலீசுவரர்

# கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நவராத்திரி பெருவிழா!

## திருமதி. துர்கா ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக். 17 -

திருக்கோயில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் 10 நாட்கள் நடத்தப்படும் நவராத்திரி பெருவிழா நேற்று முன்தினம் (15.10.2023) தொடங்கியது. இவ்விழாவினை முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

திருக்கோயில்கள் சார்பில் சித்தர்களுக்கும், அருளாளர்களுக்கும் விழா எடுத்து சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. அந்தவகையில், கமலமுனி சித்தர், பாம்பாட்டி சித்தர், சுந்தரானந்த சித்தர் ஆகிய சித்தர் பெருமக்களுக்கும், திருஅருட்பிரகாச வள்ளலார், தெய்வப் புலவர் சேக்கிழார், சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் (அப்பர் பெருமான்), நாலாயிர திவ்ய பிரபந்த தமிழ் மறைநூலினைத் தொகுத்தவரான ஸ்ரீமத்நாதமுனிகள் மற்றும் அவரது பெயரன் ஆளவந்தார் ஆச்சாரியார் போன்ற அருளாளர்களுக்கும் திருக்கோயில் சார்பில் விழா எடுத்து சிறப்பு செய்யப்பட்டுள்ளது. தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு மணிமண்டபம் அமைக்கவும், வான்புகழ் கொண்ட திருவள்ளுவர் திருக்கோயிலை புனரமைக்கவும் விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்தாண்டு 5 திருக்கோயில்கள் சார்பில் மகா சிவராத்திரி பெருவிழாவினை பக்தர்கள் பங்கேற்புடன் விமரிசையாக நடத்தப்பட்டது.

உலகில் தீமைகளை அழித்து தர்மத்தை நிலைநாட்டுகின்ற சக்தி வழிபாட்டின் தத்துவங்களை உணர்த்துகின்ற தொடர் நிகழ்வாக கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழா இந்தாண்டு திருக்கோயில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் கொலுவுடன் 15.10.2023 முதல் 24.10.2023 வரை 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவினை முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, கொலுவை பார்வையிட்டதோடு, இன்று நடைபெற்ற சகலகலாவல்லி மாலை பூஜையில் கலந்து கொண்ட மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்கள், பேனா, பென்சில் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார். நிறைவாக, மாம்பலம் சகோதரிகள் திருமதி ஆர்.விஜயலட்சுமி மற்றும் திருமதி ஆர்.சித்ரா ஆகியோரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இன்று (16.10.2023) கன்யா பூஜையும், அதனைத் தொடர்ந்து தேவி மஹாத்மியம், நவாவரண பூஜை. லலிதா சகஸ்ரநாமம், திருவிளக்கு பூஜை, சௌந்தர்ய லகரி, சுஹாசினி பூஜை, இசை வழிபாடு, அபிராமி அந்தாதி என தினந்தோறும் ஒரு வழிபாடும், திரையிசை பாடகர் வினயா கார்த்திக் ராஜன் குழுவினர் இன்னிசை, இசைத் தென்றல் கலைமாமணி வீரமணி ராஜு குழுவினரின் பக்தி இன்னிசை, தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் நுண்கலை பல்கலைக் கழகம் துணை வேந்தர் டாக்டர் சௌமியா அவர்களின் ஏற்பாட்டிலான குழு இசை நிகழ்ச்சி, இசைப்பெரொளி காயத்ரி வெங்கட்ராகவன் குழுவினரின் பக்தி இன்னிசை, கந்தர்வகான இளவல் வீரமணி கண்ணன் குழுவினரின் இன்னிசை, தமிழிசைச்சுடர் சுசித்ரா பாலசுப்பிரமணியம் குழுவினரின் பக்தி இன்னிசை, இசைப்பேரரசி நித்யா மகாதேவன் குழுவினரின் பக்தி இன்னிசை. இசைப் பேரொளி மஹதி வழங்கும் கர்நாடக இன்னிசை, சுருதிலயா இசைச் குழுவினரின் இன்னிசை என தினந்தோறும் ஒரு இசை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இவ்விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஜ.முல்லை மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டத்தில் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி கழக சட்டத்துறை சார்பில் வழக்கறிஞர்களுக்கான பேச்சுப்போட்டி நடைபெற்றது. இதில் வெற்றிபெற்ற இளம் வழக்கறிஞர் களுக்கு கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ பரிசுகள் வழங்கினார். உடன் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மு.கார்த்திகேயன், துணைத்தலைவர் ஜி.கே.மயில்வேல், அமைப்பாளர் ராம்பிரகாஷ், துனை அமைப்பாளர்கள் கே.ஆர்.நெடுமாறன், சிவஞானவேல், சசிகுமார், அரசு வழக்கறிஞர்கள் துரைராஜ், மதன்மோகன், மணிகண்டன், தமிழரசன் ஆகியோர் இருந்தனர்.



நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நகர, ஒன்றிய, பேரூர்க் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் மாவட்ட தி.மு.க. அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மாவட்ட தி.மு.க. செயலாளர் பா.மு.முபாரக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இமயம் சசிகுமார், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் பிரகாஷ், இளையராஜா, அப்துல் மாலிக், பிரபு, சீனிவாசன், ஆனந்தகுமார், மாவட்ட துணை அமைப்பாளர்கள் நௌபுல், பாபு, நாகராஜ், பத்மநாபன், முரளிதரன், வினோத்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ முன்னிலை

# நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ஆலோசனைக் கூட்டம்!

## திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன் தலைமை!

நாமக்கல், அக். 17 -

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் வழிகாட்டுதல் படி தமிழ்நாடு முழுவதும் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் இரா.குமரவேல் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான திருச்சி செ.எழில் மாறன் செல்வேந்திரன் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் பேசிய இராஜேஸ்குமார் எம்.பி, நாமக்கல் மாவட்டம் முழுவதும் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அணியினர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசின் சாதனைகளையும், தி.மு.க.வின் கொள்கை களையும் மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும். திராவிட மாடல் ஆட்சியின் வருங்கால சந்ததியினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாவட்டம் முழுவதும் அணியின் சார்பில் அரசு பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப்போட்டி நிகழ்ச்சிகள் நடத்தி அதில் பங்குபெறும் மாணவர்களுக்கு தலைமைக் கழகத்தால் வழங்கப்படும் சான்றிதழ் வழங்குவதோடு, மாவட்ட அளவில் முதல் மூன்று பரிசுகளை பெறும் மாணவ, மாணவிகளை மண்டல அளவிலான போட்டிக்கும், மாநில அளவிலான போட்டிக்கும் கலந்து கொள்ளும் வண்ணம் சிறப்பான முறையில் நடத்திட வேண்டும் என்றார். கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் கே.அய்யாவு, துணைத் தலைவர் டி.அருள், துணை அமைப்பாளர்கள் இரா.மேகநாதன், பூபாலன், சி.ஜெயக்குமார், ஸ்டாலின், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய நிர்வாக குழு உறுப்பினர் வே.பிரபு, நாமக்கல் மேற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் வட்டூர் கண்ணன், தலைவர் சுப்பிரமணி, துணைத் தலைவர் இளையப்பன், துணை அமைப்பாளர்கள் குமாரபாளையம் விடியல் பிரகாஷ், குமரவேல், அன்பழகன், சேகர், நல்லமுத்து, குப்பு சாமி, ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். இராகவானந்தம்

**அக்டோபர் 17 (1999)**



திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.

தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு. ஜம்புலிங்கம்

**அக்டோபர் 17 (2004)**



இளமைக் காலத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு, மாவட்ட பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராக பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும், பகுதிச் செயலாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராக இருமுறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். கலைஞர் நகர் பகுதி உருவாக்கியபோது, அப்பகுதிக் கழகத்தின் முதல் பொறுப்பாளராகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 131வது வார்டு கவுன்சிலராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதியில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# 3-ம் ஆண்டு நினைவேந்தல்

மாண்புமிகு
**மா.சுப்பிரமணியன்** B.A., L.L.B.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்
அவர்களின் இளைய மகன்

## சு.அன்பழகன்

நாள் : 17 – 10 – 2023

**தாய் தந்தையரின்
தியாக உணர்வை
பறைசாற்ற பிறந்தாயே...
எங்கள் அன்பகத்தின்
இதயங்களை ஏங்கவிட்டு
சென்றாயே... அன்பு!**

நீங்கா நினைவுகளுடன்...

அம்மா : **காஞ்சனா சுப்பிரமணியன்**
அண்ணன் : மருத்துவர் **சு.இளஞ்செழியன்**
அண்ணி : மருத்துவர் **கிரீத்தா செழியன்**
உறவினர்கள் மற்றும் நண்பர்கள்



நெஞ்சில் நிழலாடும் அன்பின் நினைவில்....
மடிப்பாக்கம் **சே.சிந்தன்**
துணைச் செயலாளர் – சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி தி.மு.க.






காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய தி.மு.க
சார்பில்

**கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்
நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா...**

தலைமை : **வே.ஆரோக்கியசாமி** M.Com.,D.Coop.,D.TEd.,
கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்

கலைஞர் நூற்றாண்டு விழாவில்
7000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி
சிறப்புரையாற்ற வருகை தரும்

உயர்திரு. **ஆ.ராசா** MP அவர்கள்
முன்னாள் ஒன்றிய அமைச்சர், கழக துணை பொதுச்செயலாளர்

மாண்புமிகு **கே.ஆர்.பெரியகருப்பன்** B.COm.,BL அவர்கள்
கூட்டுறவுத்துறை அமைச்சர்,சிவகங்கை மாவட்ட கழக செயலாளர்

உயர்திரு. **மு.தென்னவன்** MA., அவர்கள்
முன்னாள் அமைச்சர்,மாநில இலக்கிய அணி புரவலர்

உயர்திரு. **ஆ.தமிழரசி ரவிக்குமார்** MLA அவர்கள்
முன்னாள் அமைச்சர்,மாநில மகளிர் தொண்டரணி இணைச்செயலாளர்

40/40

மற்றும் மாவட்ட,நகர,ஒன்றிய, கிளை கழக முன்னோடிகளையும்,
அனைத்து அணிகள் நிர்வாகிகளையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...

**7000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்:**

- பாகமுகவர்கள் அனைவருக்கும் கைபேசி வழங்குதல்
- கைம் பெண்களுக்கு தையல் மெஷின் வழங்குதல்
- கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல்
- மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு கல்விநிதி உதவி வழங்குதல்
- ஆதரவற்ற தொண்டு நிறுவனங்களுக்கு அரிசி மூட்டை வழங்குதல்

**17.10.2023 செவ்வாய்கிழமை இடம்:தெப்பக்குளம் தென்கரை
காளையார்கோவில் மாலை 4 மணி**



**வே.ஆரோக்கியசாமி** M.Com.,D.Coop.,D.TEd.,
காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்,
காளையார்கோவில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்,சிவகங்கை மாவட்டம்.

# தி.மு.க தேர்தல் அறிக்கைகள்: வீட்டுக்கு விளக்கு, நாட்டுக்குத் தொண்டன்!

■ நீரை.மகேந்திரன்





இந்திய அரசியல் கட்சிகளின் தேர்தல் வரலாற்றில், எந்தக் கட்சிக்கும் இல்லாத சிறப்பும், பெருமையும் கழகத்துக்கு உண்டு. அது, வெற்றி தோல்விகளைக் கடந்து இன்றளவும் பேசப்படும் ஆவணமாக உள்ள தேர்தல் அறிக்கை.

கழகம், முதல் தேர்தலை சந்தித்த காலத்தில் இருந்தே, ஒவ்வொரு சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலின்போதும் அதிகமாக கவனிக்கப்படும் ஆவணமாக கழகத்தின் தேர்தல் அறிக்கை இருந்துள்ளது. ஏனென்றால், தமிழ்நாட்டின் தேவைகளை முன்னறிவிக்கும் நீண்டகாலத் தொலைநோக்குக் கண்ணோட்டம் கொண்ட சாசனமாக அவை திகழ்ந்துள்ளன.

பேரறிஞர் அண்ணா இருந்தவரை அண்ணாவின் முன்னெடுப்பிலும், வழிகாட்டலிலும் தேர்தல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் கலைஞரின் முன்னோக்கிய சிந்தனைகளைத் தேர்தல் அறிக்கைகளில் காணலாம்.

## நிபுணத்துவம் கொண்ட அறிக்கைகள்

1952-ஆம் ஆண்டு தமது கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும் வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்தனர் நமது முன்னோடிகள். அதன் பின்னர், 1957-ஆம் ஆண்டு முதன்முதலில் கழகம் தேர்தலில் நிற்கும்போது ‘இதுதான் எங்கள் திட்டம்’ எனத் தேர்தல் அறிக்கையை முன்வைத்து மக்களை சந்திக்கிறது கழகம்.

கழகம் தயாரிக்கும் தேர்தல் அறிக்கைகள் ஏனோ தானோ என்று இருப்பதில்லை. அண்ணா பொருளாதாரம் படித்தவர் என்பதுடன், மக்கள் மன்றத்தில் களப்பணி ஆற்றியவர் என்பதால், அவருக்கு தமிழ்நாட்டின் தேவைகள் தெரிந்து, நீண்டகால இலக்குகளை முன்வைக்கிறார். பெரும் நிபுணத்துவத்துடன் நமது முன்னோடிகள் தேர்தல் அறிக்கைகளில் பங்காற்றினர்.

‘நாங்கள் இந்தத் திட்டத்துடன் தேர்தலை சந்திக்கிறோம் என இந்திய அளவில் முதன் முதலில் அறிவித்த கட்சி கழகம்தான்’ என்கிறார் பேரறிஞர் அண்ணா. 1957-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலேயே ஒன்றிய அரசுக்கான அதிகாரம், அரசியல் சமத்துவம், ஒன்றிய அரசின் திட்ட நிதி ஒதுக்கீடுகளில் வடமாநிலங்களுக்குக் காட்டப்படும் முன்னுரிமை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறார்.

> ‘மாநிலங்களின் வேகமான வளர்ச்சியே, இந்தியாவின் வேகமான வளர்ச்சி’ எனத் தனது கருத்தினை முன்வைக்கிறார் கலைஞர்.

## செயலுக்கு வந்த கனவுகள்

விவசாய முன்னேற்றம், இந்தித் திணிப்பு, சம வேலைக்குச் சம ஊதியம், கடல் கடந்த தமிழர்கள் என எல்லாவற்றையும் அலசுகிறது 1957 தேர்தல் அறிக்கை.

“அறிவு வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட கல்விதான் மெய்யாகப் பயன்படும் கல்வியாகும். பெண்கள், சிறுகுழந்தைகள், ஊமைகள், செவிடர்கள், குருடர்கள் ஆகியோருக்கு அவரவர்க்கான கல்வி முறையில் கல்வி அளிக்கும் வசதிகள் விரிவாக்கப்பட வேண்டும். விஞ்ஞானத் தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் தேவைக்கு ஏற்பப் பெருக வேண்டும்” என்கிற இலக்குகளை முன்வைத்தது 1957-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை. அந்த இலக்கு இன்று எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை உண்மைகளைத் தேடுவோர் அறிவர்.

“சமுதாயத்தில் புரட்சி இரண்டு வழிகளில் நிகழும். ஒன்று, மக்கள் ஒன்று திரண்டு ஆயுத பலத்தால் ஆட்சி அமைப்பது. மற்றொன்று, மக்கள் தங்கள் கையில் உள்ள வாக்குச் சீட்டு என்கிற பலத்தால் ஜனநாயகப் புரட்சி நிகழ்த்துவது. நாங்கள் இரண்டாவது வழியைத் தேர்ந்தெடுக்கிறோம்” என்று 1957-இல் அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. அந்த இரண்டாவது வழிக்காக கழகத்தின் பக்கம் மக்களை அணி சேர்த்தது தேர்தல் அறிக்கைகள் என்றால் மிகையில்லை. அவற்றின் மீது விவாதங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றை அரங்குகளில் பேசியுள்ளனர். அவற்றை பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதின. குறிப்பாக, தேசியக் கட்சிகள் பிரதி எடுக்கும் வகையில் அவை அமைந்திருந்தன. எப்போதும், எந்த மாநிலக் கட்சியும் கழகத்தின் அறிக்கைக்கு முகம் கொடுக்க முடியாமல் தடுமாற்றம் அடைந்தன. அடைகின்றன.

## வீட்டுக்கு விளக்கு நாட்டுக்குத் தொண்டன்!

‘வீட்டுக்கு விளக்கு நாட்டுக்குத் தொண்டன்’ என்கிற முழக்கத்தின் கீழ் 1962-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையை முன்வைத்தார் அண்ணா.

பள்ளிச் சிறார்களுக்குப் பகல் உணவு, படிக்கும் சூழ்நிலை சீரமைப்பு, சீருடைத் திட்டம் ஆகியவை குறித்து 1962-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை பேசுகிறது. வங்கிகள் தேசியமயம், அரசுப் போக்குவரத்து நாட்டுடமை, தனியார் துறை நிபுணர்கள் பொதுத்துறைக்கு வருதல், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் என இன்றைக்கு நாம் எட்டியிருக்கும் உயரங்கள் எல்லாம் 1962-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகளாக இருந்துள்ளன. அந்த வாக்குறுதிகளை படக்கதைகளாக வெளியிட்டது ‘முரசொலி’.

பள்ளிகளில் விஞ்ஞான அறிவு, கட்டாயக் கல்வி, பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்ளுதல் என்கிற வாக்குறுதிகளும் கழகத்தின் கம்யூனிச குரலாகப் பார்க்கலாம். “வீட்டுக்கு விளக்கு, நாட்டுக்குத் தொண்டன், தொண்டு வென்றிட, விளக்கு எரிந்திட கழகத்திற்கு வெற்றிகளைக் குவிப்பீர்கள்” என அந்த அறிக்கை முழங்கியது.

## சாதி ஒழிப்பும் மக்கள் ஒற்றுமையும்

சமுதாயத்தின் நிலவும் சாதிமுறைகளை ஒழித்து சாதிகளற்ற சமுதாயத்தைக் காண்பது என்கிற இலக்கினை ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் கழகம் உயர்த்திப் பிடிக்கிறது.

மாநிலத்தில் ஆக வேண்டிய வழிகளுக்கு மட்டுமல்ல, ஒன்றிய அரசு செய்யவேண்டிய வேலைகளுக்கும் கழக அறிக்கை குரல் கொடுக்கிறது. 1967-ஆம் ஆண்டு தேர்தலின்போது அண்ணாவின் வழிகாட்டலுடன் தேர்தல் அறிக்கை வெளிவந்தது. “தயை தாட்சண்யம் இல்லாமல், கொள்கை இழக்கும் கோணல் வழி செல்லாமல், விடுதலை இயக்கம் எனும் இலக்கணத்தைப் பாழ்படுத்திக் கொள்ளாமல், ஆட்சி மன்றத்தில் உள்ள அரசியல் கட்சி மேற்கொள்ள வேண்டிய ஜனநாயகக் கடமைகளையும் நிறைவேற்றி, மீண்டும் பொதுமக்களின் ஆதரவை பெறுவதற்கான தகுதியையும் உரிமையும் பெற்று இருக்கிறது கழகம்” என அறிக்கை குறிப்பிட்டது.

> ”கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் தொடர்ச்சியாக சமூகநீதிக் கொள்கை, வறுமை ஒழிப்பு, மதச்சார்பின்மை, சாதி ஒழிப்பு, அடிப்படைக் கட்டமைப்புகளின் வளர்ச்சி, மாநில உரிமை, தொழில் வளர்ச்சி, ஆகியவற்றுக்குக் குரல் கொடுப்பவையாக இருந்துள்ளன. அதுதான் இன்றைக்கு வளர்ந்த மாநிலங்களின் வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கக் காரணம். இவற்றைத் தேர்தல் அறிக்கைகளாக வெளியிட்டு மக்களைச் சந்தித்த கட்சி தி.மு. கழகம் மட்டும்தான் என்கிறார்” திட்டக்குழுவின் முன்னாள் துணைத் தலைவர் பேரா. நாகநாதன்.

அதற்குப் பின்னர் 1971 -ஆம் ஆண்டு தேர்தலில் இருந்து தேர்தல் அறிக்கைகள் கலைஞர் கைவண்ணமாகின்றன. ‘மாநிலங்களின் வேகமான வளர்ச்சியே, இந்தியாவின் வேகமான வளர்ச்சி’ எனத் தனது கருத்தினை முன்வைக்கிறார் கலைஞர்.

நாட்டின் வளர்ச்சித் திட்டமிடல், மாநிலத்தில் இருந்து ஆரம்பமாக வேண்டும் என வலியுறுத்துகிறார். அங்கிருந்து மாநிலத்துக்கு எனத் தனித் திட்ட கமிஷன் உருவாகிறது. ஒரு மாநிலக் கட்சி தேசிய அரசியலில் ஆதிக்கம் செலுத்துவது எப்படி என்பதற்கு கலைஞரின் நுட்பங்களை நாம் தொடர்ச்சியாக அலச முடியும். அவற்றைக் கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் வழி வாசிக்க முடியும். மாநில உரிமைக்கும் மக்கள் ஒற்றுமைக்கும், நீண்ட காலத் திட்டங்களுக்கும், சர்வதேச விவகாரங்களுக்கும்கூட கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் முகம் கொடுத்துள்ளன.

சமுதாய வளர்ச்சியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சி (GROWTH WITH SOCIAL JUSTICE) பொருளாதாரத்தில் சுயசார்பு (ECONOMIC SELF RELIANCE) ஆகியவற்றை 1977-ஆம் ஆண்டு தேர்தலின்போது முன்வைக்கிறார். பணக்காரர்களை மேலும் பணக்காரர்கள் ஆக்கும் (ELITE CONSUMPTION ORIENTED) என்கிற பொருளாதாரத்தை விமர்சனமாக முன் வைக்கிறது 1977-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது ஜவஹர்லால் நேரு முன்வைத்த சமூக வளர்ச்சிக் கொள்கையில் இருந்து ஒன்றியம் விலகும்போது அதை முன் வைக்கிறது கழகம்.

## நெருக்கத்தை உருவாக்கிய அறிக்கை

கழகத்தின் பிரதிபலன் பாராத நீண்ட காலத் தொண்டனைப் போல தேர்தல் அறிக்கைகள் பணியாற்றி வருகின்றன. அவற்றை விரிவாகத் தொடர்ச்சியாகப் பார்ப்பதனூடாக, கடந்த 2021-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையை நாம் தொட்டுப் பார்க்கலாம்.

நாம் ஏற்கெனவே அடைந்தவற்றில் இருந்து அடுத்தக் கட்டத்தைப் பேசியது கடந்த தேர்தல் அறிக்கை. அதிகபட்சமாகத் தமிழ்நாட்டின் அனைத்துத் தேவைகளையும் அலசியது அந்தத் தேர்தல் அறிக்கை என ஊடகங்கள் பேசின. 2021-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவற்றை நிறைவேற்ற வேண்டும் என்றால், ஒரு ஆட்சிக் காலம் போதாது எனப் பத்திரிகைகள் எழுதின.

மாவட்ட வாரியான தேவைகளை நிறைவேற்றும் வகையில் தேர்தல் அறிக்கை இருந்தது. கழகத்தின் அறிக்கையைப் படிக்கும் ஒருவர், அதில் அவரது ஊரின் பெயரைக்கூடப் படிக்க நேரும் என எழுதப்பட்டது. குறைந்தபட்சம் ஒவ்வொரு வாக்காளருக்கும் அவரைச் சுற்றியுள்ள ஐந்து கி.மீ. பரப்பளவின் நெடுநாள் பிரச்சினை, தேர்தல் அறிக்கையில் விவாதிக்கப்பட்டிருப்பது நெருக்கத்தை உருவாக்கியது. இந்தத் தேர்தல் அறிக்கையும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை இன்னும் பல படிகளுக்கு உயர்த்த உள்ளது.

....தொடரும்.

## திராவிட இயக்க இதழ்கள் - ‘தமிழரசு’



1930-களில் சென்னையிலிருந்து வெளிவந்த மாத இதழ் ‘தமிழரசு’. இதன் ஆசிரியர் மே.மாசிலாமணி முதலியார் ஆவார். ‘ஒரு செந்தமிழ் மாத வெளியீடு’ என்று அறிவித்து, ‘எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன்’ என்ற வரிகளை இதழின் முகப்பு அட்டையில் தாங்கி வந்தது.

இது ஆன்மிகம், இசை, சிறுகதை, சிறுவர் பகுதி, நகைச்சுவை, எள்ளல், நாடகம், திரைச் செய்திகள், விழிப்புணர்வு, விளம்பரம் எனப் பல்சுவைப் படைப்புகளை வெளியிட்டு வந்தது. ஆன்மிகத்தைப் பொறுத்த வரையில், வள்ளலார் சொன்ன கருத்துகளின் அடிப்படையிலான படைப்புகளை அது தாங்கி வந்தது.

பிரபல எழுத்தாளர் விந்தன், இந்த இதழில்தான் அச்சுக் கோப்பவராகப் பணியாற்றினார். பேரறிஞர் அண்ணாவின் முதல் கட்டுரையான ‘பெண்கள் சமத்துவம்’, 1931- ஆம் ஆண்டு இந்த இதழில்தான் வெளியானது. படத்தில் காண்பது, 1933-ஆம் ஆண்டு செப்டம்பர் 16-ஆம் தேதி வெளிவந்த இதழ் ஆகும்.

## :ப்ளாஷ்பேக்



### சொந்தக்காரர் பெரியார்!

காமராஜர் முதலமைச்சராக இருந்த 1956-ஆம் ஆண்டு எனது சித்தப்பா டி.என்.சோமசுந்தரம், தியாகராயர் நகரிலிருந்த நடேச அய்யர் தெருவில் (தற்போது, நடேசன் தெரு) ஒரு பழைய வீட்டை வாங்கினார். அதனால் சுற்றி இருந்தவர்களிடமிருந்து அவர் பல்வேறு சிக்கல்களையும் சந்திக்க நேர்ந்தது. அவர் சந்தித்த இன்னல்களை திராவிடர் கழகத் தோழர்கள் மூலமாக பெரியாருக்கும் தெரிவித்தார். பின்னர் ஒரு நாள் 25-க்கும் அதிகமான தி.க தொண்டர்களுடன் பெரியாரும் அன்னை மணியம்மையாரும் என் சித்தப்பா வீட்டுக்கு வருகை தந்தனர். 5-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நான், பெரியாரை என் சொந்தக்காரர் என்று நினைத்துக் கொண்டேன். அவரும் என் கையைப் பிடித்து நலம் விசாரித்தார். பெரியார் செல்லமாக வளர்த்த அல்சேஷன் நாயுடன் அன்றைக்கு நான் விளையாடிய நினைவுகள் எல்லாம் இன்றைக்கும் நெஞ்சில் நிழலாடுகிறது. பெரியார் வந்து சென்ற பிறகு சாதி ரீதியிலான எந்தப் பாகுபாட்டையும் என் சித்தப்பா அந்தத் தெருவில் சந்திக்கவில்லை என்பதை அடிக்கடி அவர் நினைவுகூர்ந்துள்ளார்.



திருப்பதி

**-திருப்பதி, பெரியார் பற்றாளர், தியாகராயர் நகர், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033– 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கல்லூரியும் கல்வியும்

**1967-இல் தமிழகத்தில் இருந்த 109 கலை-அறிவியல் கல்லூரிகளில் இரண்டு மட்டுமே அரசுக் கல்லூரிகள். 1,31,093 மாணவர்கள் படித்தனர். கலைஞர் ஆட்சியில் [1969-1976] 68 கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 2010 - க்குள் 587 ஆக வளர்ந்தது. இதில் 62 அரசு கல்லூரிகள், 9 பல்கலைக்கழகக் கல்லூரிகள், 133 அரசு உதவிக் கல்லூரிகள், 383 சுயநிதிக் கல்லூரிகள். மாணவர்கள் - 7,09,162 .**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 272




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131